# நீ என் தேவதை

''ஸ்வேத்தா ஏய் ஸ்வேத்தா எழுந்திரு எழுந்திரும்மா மணி 6.00 ஆயிடுச்சு'' என்று தட்டி எழுப்பினார் காயத்ரி.

''அவள் எழும்பாமல் திரும்பி படுப்பதைக் கண்டு ''நல்ல பெண்ணில்ல எழுந்திரும்மா, அப்புறம் ஏன் என்னை 6.00 மணிக்கு எழுப்பி விடல்லைன்னு சண்டைக்கு வருவே. பிளிஸ்டா ராஜா எழுந்திரு''

''உச் போங்கம்மா கொஞ்சம் நிம்மதியாய் தூங்க விடமாட்டீங்களே'' என்று முணங்கியபடி மறுபடியும் கவிழ்ந்து படுத்தாள் ஸ்வேத்தா.

''அம்மா, நகருங்க நான் எழுப்பறேன். எனக்கு இவள் என்ன செஞ்சா எழும்புவான்னு தெரியும். சும்மா ராஜா கூஜான்னு கொஞ்சிகிட்டு இருந்தா ஒன்றும் நடக்காது'' என்று சொன்னவன்,

படுக்கை அருகே இருந்த மேஜையில் வைக்கப்பட்டிருந்த குவளையை எடுத்து அதிலிருந்த தண்ணீரை ''கொட கொட'' என்று அவள் மீது கொட்டினான்.

''டேய் வேண்டாம்டா, பிசாசு மாதிரி கத்துவா'' என்று காயத்ரி சொல்ல சொல்ல அவன் இஷ்டத்திற்கு ஊத்தினான்.

தொப்பலாக நனைந்த அவள், ''சேச்சே அம்மா என்ன இது'' என்று எரிந்து விழுந்தபடி எழுந்தாள்.

அருகில் வசந்த் குவளையுடன் நிற்பதை கண்டதும் கோபம் பெருகியது. அவனிடம் தன் கோபம் செல்லாது என்று தெரிந்து அம்மா மேல் பாய்ந்தாள் ஸ்வேத்தா.

சித்ராபாலா

''நான் உங்ககிட்டேதானே என்னை எழுப்பச் சொன்னேன். உங்களால முடியாதுன்னா சொல்லியிருக்கலாம். நான் அலாரம் வைச்சிருப்பேன். அதைவிட்டுட்டு இவனை யார் என்னை எழுப்பச் சொன்னா'' என்று வீடே அதிரும்படியாக கத்தினாள்.

''மரியாதையாக பேசு ஸ்வேத்தா... உன்னோட அவன் 7 வருஷம் பெரியவன். அவன், இவன் என்று இது என்ன புதுசா பழக்கம்'' என்று அவளை அதட்டினார் காயத்ரி.

''ஆமா, அண்ணன் என் மேல தண்ணிய ஊத்தறவரைக்கும் வேடிக்கை பார்த்துகிட்டுதானே இருந்தீங்க அப்பறம் என்ன? தூங்கிட்டு இருக்கும்போது திடீர்ன்னு தண்ணியை ஊத்தினா கோவம் வராதா என்ன'' என்று பதிலுக்கு கத்தினாள் ஸ்வேத்தா.

''ஞாயிற்றுக்கிழமையின்று நேத்து நிம்மதியாக 9 மணி வரைக்கும் தூங்கலாம்னு நினைச்சா.. என்னை தூங்கவிட்டாளா இவள், துரும்பை மூக்குக்குள்ளே விட்டேயில்ல... எனக்கு எப்படி இருந்திருக்கும் பழிக்கு பழி'' என்று அவனும் கத்தவும்.

''சகிக்கலை, ஏண்டா அவதான் ஏதோ சின்னப்பொண்ணு ஏதாவது செய்தான்னா நீயும் அவள் கூட போட்டி போட்டுகிட்டு இது என்னது'' என புலம்பலானார் அவர்களின் அம்மா.

''அய்யய்யோ இப்பவே மணி 6.30 ஆயிடுச்சு 7.30-க்கு ஆபீஸ்லே இன்னைக்கு இருக்கணும். நான் எப்ப குளிச்சி, சாப்பிட்டு பஸ் பிடிச்சு போறது அம்மா அப்பாவை கார்லே ஆபீஸ்லே கொண்டு டிராப் பண்ண சொல்லுங்கம்மா, இன்னைக்கு மட்டும்'' என்று கெஞ்சத் துவங்கினாள்.

''உங்க அப்பா இப்பதான் யாரையோ ரிசீவ் பண்ண ஏர்போர்ட் போயிருக்காங்க, வர 9.00 மணி ஆகும்'' என்று சொல்லவே அண்ணன் பக்கம் தாவினாள்.

''என் செல்ல அண்ணாவே நீங்க மட்டும் என் மேல தண்ணியை ஊத்தலைன்னா என்னால இவ்வளவு சீக்கிரம் எழுந்திருக்க முடியுமா? உங்க ஐடியாவே ஐடியாதான். இன்னிக்கு மட்டும் என்னை ஆபீஸில் டிராப் பண்ணிடுங்க'' என்று அவனிடம் ஆரம்பித்தாள்.

''இன்னிக்கு மட்டும் இன்னிக்கு மட்டும்னு சொல்றதுதான், ஆனா முக்கால்வாசி நான்தான் உன்னை கொண்டு போய் விடறேன். கெஞ்சறதுக்கு உனக்கு இணையா யாருமே இந்த உலகத்திலே இருக்க முடியாது ஸ்வேத்தா'' என்று அவளின் தலையை தட்டியபடி அவனும் அறையை விட்டு வெளியே வந்தான்.

கிடு கிடுவென்று பாத்ரூமில் நுழைந்து குளித்துவிட்டு வெளிவந்தாள். இளம் பச்சை நிற சுடிதாரில் பளிச்சென்று இருந்தாள்.

டிரசிங் டேபிள் முன் சென்று சீப்பை எடுத்து தன்னுடைய நீண்ட கருங்கூந்தலை சீவியவளின் கண்கள் கட்டிலில் நிம்மதியாக படுத்து தூங்கிக் கொண்டிருந்த மணியின் மீது படிந்தது, மணிகண்டன் அண்ணன் மகன், அவனின் கூந்தல் சுருளை ஆசையாக வருடிவிட்டாள்.

கடிகாரத்தை பார்த்தாள். அதற்குள் மணி 7.15 காட்டியது. ''இன்னிக்கு

லேட்தான்'' என்று முணங்கியபடி டைனிங் டேபிள் முன் போய் நின்றாள். நின்றபடியே தட்டில் இரண்டு இட்லி எடுத்து வைத்து சாப்பிட்டாள்.

உட்கார்ந்து சாப்பிடுன்னு எவ்வளவு தரம் சொல்லியிருக்கேன். என்னைக்குத்தான் உனக்கு நல்ல புத்தி வரப்போகுதோ'' என்று மறுபடியும் ஆரம்பித்தார் காயத்ரி.

''ஏன் அம்மா, உட்கார்ந்து சாப்பிட்டால் எனக்கு நல்ல புத்தி இருக்குன்னு ஆயிடுமா? நின்னு சாப்பிட்டால் எனக்கு கெட்ட புத்தியா? நீங்க பேசறது உங்களுக்காவது புரியுதா?'' என்று கேலியாக சிரித்தபடி கேட்டாள் ஸ்வேத்தா.

''எது சொன்னாலும் இடக்குத்தான்''

''கிளம்பியாச்சா ஸ்வேத்தா'' என்றபடி ஷூவுக்கு லேஸ் போட்டான் வசந்த்.

''ஆ... அப்பவே கிளம்பிட்டேன். நீங்கதான் லேட். உங்களாலே உங்களுக்கு வெயிட் பண்ணினதாலேதான் நான் ஆபீஸுக்கு இன்னைக்கு லேட் ஆக போகனும்'' என்று பழியை அவன் மேல் போட்டு கண் சிமிட்டினாள் ஸ்வேத்தா.

''அடிக்கழுதை'' என்றவன், பின் சிரித்துவிட்டான்.

பிறகு தன்னுடைய அறைக்குள் நுழைந்து நவநாகரீகமான ஒரு கறுப்பு நிற தோல்பையை எடுத்துக் கொண்டு வெளிவந்தாள்.

''டிபன் பாக்ஸ் எடுத்துக்கிட்டியா ஸ்வேத்தா'' என்று கேட்ட அண்ணியிடம் ''எடுத்துக்கிட்டேன் அண்ணி'' என்று புன்னகையுடன் கூறினாள்.

அது என்னவோ, அண்ணியிடம் விளையாடவே தோணாது அவளுக்கு எப்பவும் அவரிடம் ஒரு மரியாதை இருக்கும்.

பிறகு வீட்டிலிருந்து வெளியே வந்து தயாராக வசந்த் நிற்பாட்டியிருந்த பைக்கில் ஏறி உட்கார்ந்தாள் ஸ்வேத்தா.

அவள் அலுவலகத்திற்குள் நுழையும்போது மணி 7.45 ஆகியிருந்தது. எப்பொழுதும் 10 மணிக்குத்தான் அவள் அலுவலகத்திற்கு வருவாள். ஆனால் இன்று அவளுடைய பாஸ் மதியானத்திற்கு பிறகுதான் வருவார் என்பதால் அவர் காலையில் பார்க்கும் வேலை எல்லாம் இன்று அவள் மேல் விழுந்தது.

என்றுமே அவளுக்கு வேலைப்பார்ப்பது சிறு சலிப்பை கூட உண்டாக்கியது இல்லை. தான் செய்யும் வேலையில் கண்ணும் கருத்துமாக இருப்பாள். பி.எஸ்சி படித்து முடித்தவுடன் வேலையில் சேர்ந்துவிட்டாள். அதுவும் அவள் நிர்வாக அதிபரின் பர்சனல் செக்ரட்டரி. பர்சனல் செக்ரட்டரி என்று பெயர்தான் ஒழிய எம்.டி.க்குரிய அத்தனை அதிகாரங்களும் அவளுக்கு உண்டு. ஸ்வேத்தாவின் தகப்பனாரின் நெருங்கிய நண்பரான சிவராஜனின் நிறுவனத்தில்தான் ஸ்வேத்தா வேலை பார்ப்பது. ஸ்வேத்தாவின் தகப்பனார் அவளை வேலைக்கு அனுமதித்தது கூட, தெரிந்த நிறுவனம், நண்பரின் நிறுவனம் என்ற ஒரே காரணத்திற்காகத்தான். வேலையில் சேர்ந்த சில நாட்களிலேயே நல்ல திறமையான பெண் என்ற பெயரும் பெற்றிருந்தாள்.

12.00 மணி வரை இடைவிடாது ஃபைல்லும், ஃபோனையும்



கவனித்தாள். இடையிடையே அலுவல் விஷயமாக வந்தவர்களிடம் பேசியும் அனுப்பினாள். அவள் வேலை செய்த இந்த நான்கு மணி நேரத்தில் நிச்சயம் நாம் காலையில் வீட்டில் பார்த்த ஸ்வேத்தா இல்லை. இந்த குறும்பு, விளையாட்டு புத்தி ஒன்றும் இல்லை. வேலையில் ஒன்றிப்போயிருந்தாள்.

12.00 மணியானதும் பையை தோளில் மாட்டிக் கொண்டு காண்டீன் பக்கம் போனாள். அவளுக்கு தனியாக, வாய்பேசாமல் சாப்பிட்டால் சாப்பாடு ஒழுங்காக இறங்காது. காண்டீனில் நிறைய தோழிகள் உண்டு. அவளைச் சுற்றி ஒரு கூட்டமே இருக்கும்.

காண்டீனுக்குள் நுழையும்போதே 'ரோஸி' என்று ஒரு பெண்ணைப் பார்த்து கூவிக் கொண்டே போனாள்.

''ரோஸி, வெள்ளிக்கிழமை எப்படி வீட்டுக்கு போனே. உங்க ஏரியாவில் பயங்கர கலாட்டான்னு பேப்பர்லே படிச்சேன். பஸ் போக்குவரத்து நிறுத்திட்டாங்களாமே. ரொம்ப பிராப்ளம் ஆயிடுச்சா. நியூஸ் படிக்கும்போது நீ எப்படி வீட்டுக்கு போனியோன்னு ரொம்ப கவலையா இருந்தது''

''அப்பாக்கூட போயிட்டேன். அதனால் பிரச்சனையில்லை. அப்பாகூட இருந்தா ஏதோ ஒரு பயங்கர செக்யூரிட்டி இருக்கிற மாதிரி ஒரு பீலிங்க் அது நேச்சுரல்தானே ஸ்வேத்தா''

''ஸ்வேத்தா, பாஸ் ஏன் இன்னைக்கு மார்னிங் ஆபீஸ்க்கு வரவில்லை. உனக்குதான் ரீஸன் தெரிந்து இருக்குமே''

''பாஸோட சன் இன்னைக்கு மார்னிங் அமெரிக்காலேயிருந்து வந்திருப்பான். அதனால் அவன் கூட பேசுவதற்காக பாதிநாள் லீவ்''

''பாஸ்வோட சன்னா? பாஸ்க்கு சன் இருக்காரா. எனக்கு இன்னைக்குத்தான் தெரியும். படிச்சு முடிச்சுட்டு வராரா?''

''ம்ஹூம் அப்படியில்லை. படிச்சு முடிச்சவுடன் அமெரிக்காவில் வேலையில் சேர்ந்தாச்சு. இப்ப ஏதோ இரண்டு மாச லீவில் வந்திருக்கான்.''

''அமெரிக்காவில் வேலையில் சேர்ந்தாச்சா? ஆச்சர்யமா இருக்கே. இங்க அவரோட இவ்வளவு பெரிய ஆபீசை விட்டுட்டா? அதிலேயும் அங்க தங்கியிருக்கிற நிறைய நம்ம நாட்டு ஆட்களுக்கு எப்படா இந்தியாவுக்கு ஓடிவரலாம் அப்படின்னு இருக்குமாமே? இவர் வித்தியாசமானவர்தான். ஏனாம்?'' என்று அவளையே கேட்டாள்.

இதுவரை அவளே அதற்கான காரணத்தை அறிய ஆர்வம் காட்டியதே இல்லை. சிவராஜனிடம் இதுவரை அதைப்பற்றி கேட்டதே இல்லை.

இப்பொழுது அவளுக்குள் 'ஏன்' என்ற கேள்வி பெரிதாக எழுந்தது. மதியானம் அவர் வந்தவுடன் கேட்க வேண்டும் என்று தீர்மானித்துவிட்டாள்.

''தெரியாது, என்று உதட்டை பிதுக்கினாள் ஸ்வேத்தா'' பிறகு தொடர்ந்து டிபன் பாக்ஸ்சையும் மூடிவிட்டு, ''டைம் ஆயிடுச்சு ரோஸி வா கிளம்பலாம்'' என்று அவளையும் கிளப்பிக் கொண்டு போனாள்.

ரோஸலினாவுக்கு அக்கௌண்ட்ஸ் பிரிவு அதனால் அவள் பாதி வழியில் பிரிந்து போனாள்.

ஸ்வேத்தா சிவராஜனின் அறைக்குள் நுழையும்போது... அவர் அங்கு அமர்ந்து சில பேப்பரில் கையொப்பமிட்டுக் கொண்டிருந்தார்.



''என்ன அங்கிள், அதுக்குள்ள வந்துட்டிங்க, 2.00 இல்லே 3.00 மணிக்கு வருவீங்கன்னு எதிர்பார்த்தேன் உங்க மகனை அதுக்குள்ள சீராட்டிட்டு வந்துட்டீங்களா'' என்று கிண்டலாக கேட்டாள்.

அவரும் அதைக் கண்டு கொண்டாலும் ''ஆ... எல்லாம் முடிச்சாச்சு, இப்ப அவன் அம்மாவுடைய முறை அவனும், அவளும் ஊர்க்கதை எல்லாம் பேசிட்டு இருப்பாங்க, ம்ம்ம். இன்னும் 2 மாசம்தானே இருப்பான். அதற்குள் வருஷக்கதை முழுசும் சொல்ல வேண்டாமா?'' ஏக்கத்துடன் கூறினார் அவர்.

''ஏன் அங்கிள் இவ்வள்வு பாசம் வைச்சிருக்கீங்க நீங்க ஏன் உங்க மகனை ஸ்டேட்ஸ்க்கு அனுப்புறீங்க பேசாம இங்கேயே இருக்கச் சொல்லுங்களேன். இவ்வளவு பெரிய ஆபீஸை நிர்வகிக்க நீங்க எவ்வளவு கஷ்டப்படுறீங்க. உங்க மகனும் இருந்தா உங்களுக்கு எவ்வளவு உதவியாக இருக்கும்'' என்று யோசனை கொடுத்தாள் ஸ்வேத்தா.

''உம் அது எங்கே இந்த ஜென்மத்திலே நடக்கப்போகுது. அவனுக்கு நம்ம ஊர் பிடிக்கவில்லையாம். கசகசன்னு இருக்காம். ஒரே இரைச்சலாம். ரோடுகளில் வாகனம் ஓட்டுபவர்களிடம் ஒரு ஒழுக்கம் இல்லையாம். அசிங்கமா இருக்காம். பிடிக்கவில்லையாம். மூன்று வருஷத்தில் ரொம்ப பழகிட்டான். வருஷம் ஒருவாட்டி வந்து இரண்டு மாசம் தங்குவான் அதுவும் போன வருடம் வரவில்லை. இவன் அம்மாவும் நானும் போயிருந்தோம். அவன் அம்மாவும் எவ்வளவு முறை கெஞ்சியிருக்கிறாள் தெரியுமா? மசியமாட்டேன் என்கிறான். இத்தனைக்கும் அம்மா என்றால் உயிர், அவனுக்கு''

அவ்வளவுத்தான் ஸ்வேத்தாவிற்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது. ''ஏன் அங்கிள் இங்கே வாழ்கின்ற மனுஷங்க எல்லாம் உங்க மகனுக்கு மனுஷங்களா தெரியலையாமா? அமெரிக்காவாம் அமெரிக்கா. நம்ம நாடு மாதிரி வருமா? ச்சேச்சே என்னை எல்லாம் அமெரிக்காவில் கொண்டு போய் விட்டால் 2 நாளில் அடிச்சுக்கோ, புடிச்சுக்கோன்னு ஓடி வந்துடுவேன். எப்படி அங்கிள் நாம பிறந்து வளர்ந்த இடத்தை மறக்க முடியும். உங்க மகனை இழுத்துட்டு வந்து டப்டப் என்று எனக்கு அடிக்கணும் போல இருக்கு'' என்று சொல்லிவிட்டு நாக்கை கடித்துக் கொண்டாள்.

''ஸாரி அங்கிள் ரொம்ப ஸாரி. உங்ககிட்டேயே வந்து உங்க மகனை அடிக்கப் போறேன்னு சொல்றேன்'' என்று மன்னிப்பு கேட்டாள்.

ஆனால் அவர் கோபப்படாமல் சிரிக்கவும் 'ஏன்' என்று கண்களாலேயே கேட்டாள்.

''உன்னை என் மகன் முன்னால் கொண்டு போய் நிறுத்த வேண்டும், என் முன்னாடி என்ன பேச்சு பேசற அப்ப...'' என்று திரும்பவும் சிரிக்கவும்.

''எனக்கென்ன பயமா? கூட்டிட்டு வாங்களேன் உங்க மகனை, நாக்கை பிடிங்கிக்கற மாதிரி கேட்கறேன் இரண்டு வார்த்தை. எங்க ஊரென்ன அவ்வளவு இளக்காரமாவா இருக்கு. என் முன்னாடி மட்டும், இந்த ஊரில் ஒழுக்கம் இல்லை. கஜாமுஜான்னு இருக்கு என்று சொல்லட்டும், நடக்கறதே வேற'' என்று கைமுஷ்டி இறுக்கி காட்டினாள். அவளுக்கு ஏனோ அந்த அமெரிக்க ஆசாமியை கொஞ்சமும் பிடிக்கவில்லை. அவன் பேச்சை எடுத்தாலே சுறுசுறு என்று கோபம் எட்டி பார்ப்பதை உணர்ந்தாள்.



சிவராஜனோ புன்னகையை நிறுத்தவேயில்லை. ''ஸ்வேத்தா உனக்கு இவ்வளவு அதிகமாக நாட்டுப்பற்று இருக்கின்றது என்று எண்ணும்போது எனக்கு ஆச்சர்யமாக இருக்கின்றது. நீ ஒரு சிறந்த பொண்ணும்மா'' என்று முடித்தார்.

அவர் மகனை குற்றம் சாட்டி பேசுகிறேன், அதை மறுத்து வாதாடாமல் எனக்கு ஏன் ''சபாஷ்'' போடுகின்றார் என்று யோசித்த ஸ்வேத்தாவிற்கு ஒன்றுமே புரிபட்வில்லை.

அதற்கு பிறகு இருவரும் பேசியது அலுவலக விஷயமாக இருந்தது.

## 2

**அ**ன்று இரவு வீட்டிலும் அவன் பற்றிய பேச்சுதான் நடந்தது. இரவு எல்லோரும் சேர்ந்து ஒன்றாக அமர்ந்து சாப்பிடுவது வழக்கம். முதலில் ஆரம்பித்தது முத்துசாமி ஸ்வேத்தாவின் தந்தை.

''இன்னைக்கு ஏர்போர்ட்டில் சிவராஜனோட மகனைப் பார்த்தேன், அப்பப்பா எவ்வளவு மாறியிருக்கான் தெரியுமா? சரியா மூன்று வருஷத்துக்கு முன்னாடி அவனை நான் பார்த்தது. அதுக்கப்பறம் அவனை பார்க்கும் வாய்ப்பே எனக்கு கிடைக்கவில்லை. இரண்டு வருஷத்துக்குப் பிறகு இன்னைக்குத்தான் மெட்ராஸ் வரானாம். புத்திசாலித்தனம் முகத்திலேயே தெரியுது, என்னக் கேட்டாலும் டாண்டாண் என்று தயக்கமில்லாம பதில் வருது தெரியுமா?'' என்று அவனைப்பற்றி சிலாகித்துச் சொல்லவும் ஸ்வேத்தாவால் தாங்க முடியவில்லை.

''சரியான கர்வம் பிடித்த ஆளாய் இருப்பான் அப்பா. நம்ம ஊரைப்பற்றி எவ்வளவு இளக்காரமாக சொல்வானாம் தெரியுமா?'' என்று இடை புகுந்து சொன்னாள்.

''உனக்கு யார் இந்த மாதிரி எல்லாம் சொன்னது'' என்று கோபப்பட்டார் முத்துசாமி.

''ஏன் அங்கிள் தான் சொன்னார். பாவம் அங்கிள் ரொம்ப வருத்தப்பட்டார். அமெரிக்காவிலே அப்படி என்னத்தான் கண்டுட்டானோ அகந்தை பிடித்தவன்.''

''ஷ்ஷ். இது என்ன பேச்சு, ஒருத்தரை பற்றி சும்மா, நீயாக எந்த முடிவுக்கும் வந்துவிடக்கூடாதும்மா. அதோட அவன் எப்படிப்பட்டவனாகவும் இருந்துட்டு போகட்டும் உனக்கென்ன வந்தது. நாவை கொஞ்சம் அடக்கி வை'' என்று அவளுக்கு அறிவுரைக் கூறிவிட்டு பேச்சை அத்துடன் நிறுத்தினார்.

அப்பா, அவனை புகழ புகழ அவளுக்கு மேலும் மேலும் எரிச்சல் கூடிக்கொண்டு வந்தது. ரொம்ப அலட்டிப்பான் போல பெரிய இவன் என்று நினைப்பு என்று மனதுள் எண்ணினாள்.

சட்டென்று அவளுக்கும் ஒரு மாதிரியாக போய்விட்டது. எவன் எக்கேடு

கெட்டு போனால் எனக்கு என்ன வந்தது. வீணாக முன்பின் அறியாதவனிடம் எனக்கு என்ன விரோதம் அவளுக்கு தன் மேல் கோபம் ஏற்பட்டது.

ம்றுநாள் அலுவலகத்திலும் அவனைப் பற்றிய பேச்சு எழாமல் இல்லை. ஆனால் முதலில் துவங்கியது ஸ்வேத்தாதான்.

''என்ன அங்கிள் உங்க மகன் பெயரை என்கிட்டே சொல்லவே இல்லை.'' என்று சாதாரணமாக ஆரம்பித்தாள்.

''இரண்டுநாள் கழிச்சு ஆபீஸ் வரேன்னு சொன்னான். அப்போ அவன்கிட்டேயே கேட்டுக் கொள்'' என்று சொல்லிவிட்டு நகைத்தவர் பின் என்ன நினைத்தாரோ, ''அவன் பெயர் ராம்கிஷோர்'' என்று கூறினார்.

சிரிப்பு வந்தது ஸ்வேத்தாவிற்கு ''ஏன் அங்கிள், கிளிண்டன்னு பெயர் வச்சிருக்கலாம். எங்கிருந்து பிடிச்சீங்க கிஷோர் அப்படின்னு'' என்று கூறி மீண்டும் சிரித்தாள்.

''ஏன் பெயர் நல்லாயில்லையா?'' என்று ஒரு மாதிரி குரலில் வினவினார் அவர்.

''இது ஒரு கேள்வியா அங்கிள். உங்க பையனுக்கு பொருத்தமான பெயர் கிளிண்டன்தான். அமெரிக்கா நாகரீகத்தில் மிதப்பவருக்கு, அதே மாதிரி பெயரையும்தான் மாத்திடுங்களேன்'' என்று முடித்துவிட்டாள்.

இன்னும் விட்டால் ஏதேதோ பேசிக்கொண்டு போவோம் என்று அவளுக்கு புரிந்துதான் போனது.

மேலும் சிவராஜன், அடிக்கடி தன்னைப்பார்த்து நகைப்பது போலவும் அவளுக்கு தெரிந்தது. ஏன் என்று அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை.

''அப்பறம் ஸ்வேத்தா, இன்னைக்கு நான் உங்க வீட்டு வழியாகத்தான் போறேன். அந்த பக்கம் வேலையிருக்கு 5.00 மணிக்கு கிளம்பறேன். நீயும் வாயேன். போகிற வழியில் உன்னையும் டிராப் பண்ணிடறேன்.''

''ஓ.... அங்கிள், இன்னைக்கு நான் பிரிட்டிஷ் லைப்ரரிக்கு போறேன். புதுசா நிதி நிர்வாகத்தைப் பற்றி தெரிஞ்சுக்கணும்னு ரொம்ப ஆசை வந்திருக்கு. நீங்க கூப்பிட்டதுக்கு தாங்க்ஸ் அங்கிள்'' என்று நிதானமாய்ச் சொல்லிவிட்டு போனாள் ஸ்வேத்தா.

இவள் லைப்ரரிக்குள் நுழையும்போது மணி 5.30 ஆகிவிட்டிருந்தது. உள்ளே போய் ஒவ்வொரு அலமாரியாக அவளுக்கு வேண்டிய புத்தகத்தை தேடினாள். அரைமணி நேரம் தேடிய பிறகு, அவளுக்கு தேவையான புத்தகம் கிடைத்தது. திருப்தியுடன் புத்தகத்தை இரண்டு தட்டு தட்டிவிட்டு, பதிவு செய்யும் பெண்ணிடம் புத்தகத்தையும், மெம்பர்ஷிப் கார்டையும் நீட்டினாள், அந்த பெண் புத்தகத்தை திருப்பவும்

''மேடம் காலையில் எடுத்து வைக்க சொன்னேனே, ஆர்.டி. ஜோசஃப் எழுதிய தொழிற்துறையில் நிதி நிர்வாகம் என்று புத்தகம். எடுத்து வைத்துவிட்டீர்களா'' என்று அழகான திருத்தமான ஆங்கிலத்தில் கம்பீர குரல் ஒன்று ஸ்வேத்தாவிற்கு மிக அருகில் ஒலித்தது.

ஸ்வேத்தாவிற்கு சிரிப்பு வந்தது. பாவம் என்று நினைத்துக் கொண்டாள். பின்னே, அவன் கேட்ட அதே புத்தகத்தை தானே இவள் பதிவுச் செய்யக் கொடுத்திருக்கிறாள். படிச்சிட்டு சீக்கிரத்தில் ஒரு வாரத்திலே



திருப்பி கொடுத்திடலாம் என்று மனதினுள் முடிவெடுத்தாள். ஆனால் அங்கே யார் அவளுடைய முடிவுக்காக காத்திருந்தார்கள்.

''ஓ... எஸ். சார் இதோ பாருங்க புக். கார்டை கொடுங்க'' என்று அவசர அவசரமாக அவனுடைய கார்டில் பதிவு பண்ணி புத்தகத்தையும் தூக்கி அவனிடம் கொடுத்தாள் அந்தப் பதிவு செய்யும் பெண்.

ஸ்வேத்தாவிற்கு சற்று நேரம் ஒன்றுமே புரியவில்லை. தன்னிடம் சிறு அனுமதி கூட பெறாமல் 'கூல்'லாக தான் எடுத்து வந்த புத்தகத்தை பதிவு போட்டு கொடுத்தவளை கண்டதும் சுறு சுறு என்று கோபம் ஏறியது.

அந்த பெண்ணிடம் பேசக்கூட பிரியமில்லை ஸ்வேத்தாவிற்கு. சட்டென்று திரும்பி அந்த கம்பீர குரலுக்குடையவனை நிமிர்ந்து பார்த்தாள்.

பார்த்தவளின் இதயம் எம்பி குதித்தது.

அந்தப் பெண், அவசர அவசரமாக அவனுக்கு பதிவு செய்து புத்தகத்தை கொடுத்ததன் காரணம் நன்றாகவே புரிந்து போயிற்று.

பார்த்தவுடனேயே ஆளை அடித்து இழுத்துப் போடும் உருவமும், கனக்கச்சிதமான உடலமைப்பும், ஆறடி உயரமும், செதுக்கி வைத்திருந்தார் போலமைந்திருந்த மூக்கும், வாயும், நாசியும், நேர்கொண்ட பார்வை அழகான மீசையும்.. அந்த பெண்ணை மயக்கியிருக்கிறது என்று தெரிந்தது ஸ்வேத்தாவிற்கு.

நான் எல்லாப் பெண்களையும் போல் இல்லை. நான் ஏன் இவனுக்கு விட்டு கொடுக்கணும். சண்டைப் போட்டாவது இந்த புத்தகத்தை வாங்கிக் கொண்டு போய்விடமாட்டேன். இவன் எவ்வளவு பெரிய மன்மதனானாலும் எனக்கு இவன் சுண்டைக்காய் என்று மனதுள் எண்ணியவள்.

அவனை நேராக பார்த்து,

''லுக், இந்த புக்'கை நான்தான் முதலில் எடுத்து வந்தேன். அதனால் இதனை எடுத்துப்போகும் உரிமை எனக்குத்தான் உண்டு. இதை மரியாதையாக என்கிட்டே கொடுத்திருங்க'' என்று மிரட்டினாள் ஸ்வேத்தா.

ஆனால் அவனோ புருவத்தை உயர்த்துவது போல் உயர்த்தி அவளை உற்று பார்த்துவிட்டு, பின்பு புத்தகத்தை தன்னுடைய நீண்ட கரங்களால் அவள் முன்னே நீட்டினான்.

''அடுத்த முறை நான் எடுத்துக்கறேன். இதில் ஒரு ப்ராஃபளமும் இல்லை. எதற்காக ஒரு காட்சியை உருவாக்குகின்றாய்'' என்று நிறுத்தி நிதானமாக சொல்லிவிட்டு திரும்பிப் பார்க்காமல் போனான்.

ஸ்வேத்தாவிற்கு ஒரே அவமானமாக போய்விட்டது. என்னவோ சண்டைக்காரி மாதிரி ஏன் பேசினேன். சேச்சே எனக்கு புத்தியே இல்லை. எவ்வளவு அவமானப்படுத்தி விட்டான் என்று தன்னையே நொந்தாள்.

என்னவோ அவன் நல்லவன் என்பது போலவும், இவள் கெட்டவள் என்பது போலவும் காட்டிவிட்டானே, என்னை எவ்வளவு சீப்பாக நினைச்சிருப்பான் என்று ஒரு கணம் எண்ணியவள், எண்ணியபடியே புத்தகத்தை தூக்கிக் கொண்டு, அந்த பெண்ணை ஒருமுறை முறைத்துவிட்டு வந்தாள்.

பிறகு ஆட்டோ பிடித்து வீட்டுக்கு வரும்போது மணி 7 ஆகியிருந்தது.



''இருட்றதுக்கு முன்னாடி வீட்டுக்கு வா என்று எத்தனைவாட்டி சொல்லியிருக்கேன்'' என்று கூறியபடி கதவைத் திறந்தார் காயத்ரி.

என்றும் இல்லாத அசதி அவளுக்கு இன்று வந்தது. என்ன நினைத்தும் மனம் ஆறவில்லை.

''ச்சு'' என்று அலுத்தபடி தன்னுடைய அறைக்குள் நுழைந்தாள்.

கைப்பையை மேஜையில் வைத்துவிட்டு மாற்று துணியோடு பாத்ரூமில் நுழைந்தாள். உடம்பை கழுவிவிட்டு, நைட்டியுடன் வெளியே வந்தாள்.

மனம் லேசாக அமைதிப்பட்டது. குளித்தது அவளை சகஜ நிலைக்கு கொண்டு வந்தது.

அம்மா கொண்டு வந்து தந்த காபியை குடித்துவிட்டு, மணியுடன் சிறிது நேரம் விளையாடினாள்.

பிறகு அவன் கதை சொல்லு அத்தை, சின்ட்ரல்லா ''கதை சொல்லு'' என்று தொல்லைப்படுத்தவும், கதை சொன்னாள். கதை சொல்ல சொல்ல அவளின் மடியில் படுத்து அவன் தூங்கிவிட்டான்.

மணிக்கு வேறெந்த கதை சொன்னாலும் பிடிக்காது. சின்ட்ரல்லா கதை என்றால் எத்தனை வாட்டி சொன்னாலும் அலுக்காமல் கேட்பான்.

சின்ட்ரல்லா அழகி என்றால், அத்தே உன்னை விடவா அழகா இருப்பா என்று கேட்பான். அந்த நான்கு வயதிலேயே, அழகுக்கும், அசிங்கம் என்பதற்கும் வித்தியாசம் அவனுக்கு தெரிந்திருந்தது.

ஸ்வேத்தாவும் சாப்பிட்டுவிட்டு படுக்கையில் படுத்து கண்களை மூடினாள்.

## 3

**அ**டுத்த நாள் அவள் மனசு முழுவதும் அமைதியடைந்துவிட்டது. எவன் என்ன சொன்னால் எனக்கு என்ன. மொத்தத்தில் புத்தகம் என் கையில் வந்துவிட்டது. இதற்கு மேல் என்ன வேண்டும் என்று மனதின் உறுத்தலை நீக்கினாள்.

பிறகு ஜாலியாக அலுவலகத்திற்கு கிளம்பினாள். பஸ் பிடித்து அலுவலகத்திற்குள் நுழையும்போது மணி 9.30.

''அம்மா, இன்னைக்கு அய்யா வரவில்லை. அவரு பிள்ளை தான் வந்திருக்கிறார். நீங்க வந்தவுடன் உங்களை வரச் சொன்னார்'' என்று சொல்லிவிட்டு போனான் ப்யூன்.

அந்த அகங்காரம் பிடித்தவனா? நான் போடற போட்டில் கூனி குறுகி போய்விட மாட்டானா? கர்வம் பிடித்தவன். சென்னை அசிங்கமாமே அவனுக்கு, வரேன் வரேன். ஒரு கை பார்க்கின்றேன், என்று வீறாப்பாக கூறிவிட்டு தன்னுடைய அறையிலிருந்து வெளியேறி அவனைப் பார்க்கச் சென்றாள்.

அவன் இருந்த ரூமிற்குள் நுழைந்த ஸ்வேத்தாவிற்கு, நாற்காலியில்



அமர்ந்திருப்பவனைக் கண்டதும் பேச்சு, மூச்செல்லாம் நின்று போனது போல தோன்றியது.

நேற்று லைப்ரரியில் பார்த்தவன் அல்லவா இவன். சரியான சண்டைக்காரி இவள் என்று சொல்லாமல் சொல்லிவிட்டு போனவன் அல்லவா இவன் என்று எண்ணியவளுக்கு பேச்சு வர மறுத்தது.

''நீ.... நீ என்று திக்கி ஒருமையில் ஆரம்பித்தவள் ''நீங்க...'' என்றபடி இழுத்தாள். அதற்குள் கொஞ்சம் அவளை நிலைப்படுத்திக் கொண்டாள்.

பின்னே, அவன் மட்டும்தான் அவளைப் பார்த்து அதிர்ந்து போயிருந்தான். அவனிடம் சின்ன ஆச்சர்யமோ, நீயா? என்ற கேள்வி குறியோ எதையுமே காணோம். ஏதோ இன்றுதான் முதன் முதலாக அவளை சந்திப்பது போன்று அவனுடைய பார்வையில் அவள் தன்னை சமாளித்துக் கொண்டாள்.

இவள் இழுத்த நீங்கள் என்ற சொல்லில், அவன் லேசாக நகைப்பது போல் அவளுக்கு தெரிந்தது. ஆனால் பதிலும் சொன்னாள்.

''நான் கிளிண்டன்'' என்றவன் 'பக்' என்று சிரிப்பை அடக்க முயன்று முடியாமல் பற்கள் பளீரிட சிரித்தான்.

ஸ்வேத்தாவிற்கு முகம் சிவந்து போயிற்று. அங்கிருந்து திரும்பி ஓடிவிட வேண்டும் போல் கால்கள் பரபரத்தன. சிவராஜன் மேல் கோபம் வந்தது. அவள் சொன்னதை அப்படியே அவனிடம் போய் சொல்லுவார் என்று அவள் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

அவன் சட்டென்று முகத்துக்கு நேராய் சொல்லவும் ஏதோ பிடிபட்டார் போன்ற உணர்வு அவளுக்கு ஏற்பட்டது. அதுவும் அவன் கோபப்படாமல் சிரிப்பதை காணவும் குழம்பினாள். பிறகு தன் மேல் தான் தவறு என்று உணர்ந்து,

மேஜையில் கண்ணை ஓட்டியபடி ''ஸாரி'' என்று முணுமுணுத்தாள். ஏனோ அவன் முகத்தை நிமிர்ந்து பார்க்க கூட அவளுக்கு தைரியம் வரவில்லை.

''ஏன் ஸாரி, என்னை பார்த்த பிறகு கிளிண்டன் என்ற பெயரும் எனக்கு பொர்ருந்தாது என்று நினைச்சுட்டியா. விட்டால் மோனிகா எங்கே என்று கேட்பாய் போலிருக்கே'' என்று சிரிப்பு மாறாமல் அவன் கேட்க,

இந்த பேச்சை இவன் விடமாட்டானா என்று எரிச்சல் வந்தது ஸ்வேத்தாவிற்கு.

இம்மாதிரியான ஒரு இக்கட்டில்தான் வந்து மாட்டிக்கொள்ளக் கூடும் என்று அவள் கனவிலும் எதிர்பார்க்கவில்லை.

பதில் ஒன்றும் பேசாமல் பல்லைக் கடித்துக் கொண்டு நின்றாள் ஸ்வேத்தா.

அவனும் அதற்கு மேல் அப்பேச்சை முடித்துக் கொண்டது அவளுக்கு சற்று நிம்மதியளித்தது.

''அப்பறம், நான் உன்னை கூப்பிட்டது இதோ இந்த ஃபைல் விஷயமாக.''

''அப்பா உனக்கு இதெல்லாம் தண்ணி பட்டபாடு என்றார், இதைப்பற்றி விளக்கமாக சொல்'' என்று வினவினான்.

கிண்டல் செய்கின்றானா என்று ஒரு கணம் எண்ணியவள், அந்த எண்ணத்தை ஒதுக்கிவிட்டு தங்களின் நிறுவனத்தின் தற்போதைய நிலையைப் பற்றி விளக்கமாக வேலையே கண்ணாக ஒப்பித்தாள் என்று சொல்லலாம்.

என்னவோ தோன்றவும், நிமிர்ந்து அவனைப் பார்த்தவள், அவன் தன்னையே பார்த்துக் கொண்டிருப்பதை கண்டதும் லேசாக சிவந்தாள். ''எ... என்... என்ன'' என்று திக்கியபடி கேள்வி கேட்டாள்.

அவனோ சிரித்தபடி, அவளின் தடுமாற்றத்தை அறியாதவன் போல,

''பரவாயில்லை, செய்யற வேலையை நன்றாக புரிந்துதான் செய்கின்றாய், உன்னை அப்பா ஆகா. ஓகோ என்று ஏன் புகழ்கின்றார்.'' என்று சொல்லிக் கொண்டு போனவனை டெலிபோன் கூப்பிட்டது.

ஓகோ. என்னை சோதித்து பார்க்கின்றானா. நான் எப்படி, வேலையில் ஒத்துழைப்புடன் இருக்கின்றேன் என்று சோதிக்கின்றானோ என்று கோபப்பட்டாள்.

தன்னுடைய அறைக்குள் நுழைந்தவளுக்கு தன் நிலையை எண்ணி சிரிப்பு வராமலில்லை.

பின்னே, போன வேகமென்ன, திரும்பி வந்த சோகமென்ன. வாயடைத்து நின்றுவிட்டு வந்த தன்னையே வித்தியாசமாக உணர்ந்தாள் ஸ்வேத்தா. ஏன் தன்னால் எப்பொழுதும் போல பேசமுடியாமல் போனது என்று யோசித்தாள்.

முன்தினம் இவனைப் பற்றிய நினைப்பில் இருந்ததும், எதிர்பாராமல் இவனை இங்கு சந்தித்ததும்தான் காரணம் என்று அவள் தன்னைச் சமாதானம் செய்து கொண்டாள். அதன்பிறகு அவள் அவனை நேரில் சந்திக்கவில்லை. இரண்டு முறை அவனாகவே போன் செய்து ஏதோ வேலை விஷயமாக பேசினான்.

சாயங்காலம் வீட்டுக்கு திரும்பியவளுக்கு அப்பாடா என்றிருந்தது. ஏதோ அவ்வளவு நேரம் இறுக்கமான சூழ்நிலையில் இருந்து விடைப்பெற்றவள் மாதிரியான உணர்வு.

வீட்டில் வசந்த் மட்டுமே இருந்தான்.

''அம்மாவும், அண்ணியும் எங்கேண்ணா'' என்று கேள்வி கேட்டாள், ஸ்வேத்தா.

''நான் ஆபீஸ்லேயிருந்து வந்தவுடன் என்னை வீட்டு காவலுக்கு இருத்திவிட்டு இரண்டு பேரும் குமரன் சேலைக் கடைக்கு போயிருக்காங்க. பட்டு சேலை எடுக்கணுமாம். மணியும் அழுது அவங்ககூட போய்விட்டான். உனக்கு டிபனும், காபியும் டேபிள்-மேலே எடுத்து வைச்சிருக்காங்க. எடுத்து சாப்பிடு'' என்று சொல்லிவிட்டு கையிலிருக்கும் பத்திரிகையில் கண்பதித்தான்.

உடை மாற்றிவிட்டு, டிபன் சாப்பிட்டுவிட்டு அவளும் வசந்தின் பக்கத்தில் 'தொப்' என்று உட்கார்ந்தாள்.

சிறிய மேஜையில் அவள் எடுத்துப் போட்டிருந்த லைப்ரெரி புத்தகத்தை விரித்து அதில் கண்ணை ஓட்டினாள். ஒருமணி நேரம் அதில் அப்படியே ஒன்றிப் போய்விட்டாள்.



அம்மாவும் அண்ணியும் வந்த பிறகுதான் புத்தகத்தை மூடினாள்.

காயத்ரி வரும்போதே ஒரு செய்தியுடன் வந்தார். ''குமரன் சில்க்'லே சிவராஜனோட ஒய்ஃப்பையும் அவங்க மகனையும் பார்த்தேன். எப்படி இருக்கான் தெரியுமா. ராஜா மாதிரி இருக்கான், சின்ன பிள்ளையிலேயிருந்தே நான் அவனைப் பார்த்ததில்லை; படிச்சதெல்லாம் ஊட்டி கான்வென்டில். எல்லா விடுமுறைக்கும் சென்னை வருவான் போல. அவன் மெட்ராஸ்க்கு வரும்போது நாம ஊருக்கு போயிடுவோமா அதனால அவனைப் பார்த்ததேயில்லை. இதோ அவனை எனக்கு அறிமுகம் பண்ணிவச்சா. என்ன அடக்கம் தெரியுமா என்ன கேட்டாலும் சிரிச்சிகிட்டே பதில் சொல்றான்.

நான் கூட ஒரு நாளைக்கு நம்ம வீட்டுக்கு விருந்துக்கு கூப்பிட்டேன். ''வரேன்'' அப்படின்னு சொன்னான். ம்ஹூம், அவனை மாதிரி ஒரு மருமகன் எனக்கு கிடைச்சா நல்லாயிருக்கும்'' என்று முடித்தார் காயத்ரி.

அதிர்ந்து போனாள் ஸ்வேத்தா.

''ஒருத்தரை பார்த்தவுடன் எப்படியம்மா நல்லவர் அப்படின்னு எடை போட முடியும். எனக்கென்னமோ அவனைப் பார்த்தால், மிகுந்த கர்வம் உள்ளவன் மாதிரிதான் இருக்கு. தனக்குதான் எல்லாம் தெரியும் மற்றவர்கள் எல்லோரும் 'டம்மி' அப்படின்னு நினைப்பவன், அவன்'' என்றவளை அவளின் அம்மாவின் கேள்வி நிறுத்தியது.

''ஸ்வேத்தா, நீ என்னைக்கு அவனைப் பார்த்தே. சொல்லவே இல்லை, என்கிட்டே. அவன் கூட உன்னைப்பற்றி, விசாரித்தான்'' என்றார் காயத்ரி. என்னைப்பற்றி விசாரித்திருப்பான்? என்று எண்ணியவளுக்கு ஆச்சர்யமாக இருந்தது. ஆனால் என்ன விசாரித்தான் என்று அம்மாவிடம் கேட்க ஏனோ கூச்சமாக இருந்தது.

''இன்னைக்கு ஆபீஸ்க்கு அங்கிள் வரவில்லை. இவன்தான் வந்திருந்தான்'' என்று மெதுவாக சொன்னாள், ஸ்வேத்தா.

''அட ஆமா.. என்கிட்டே இதோ சொன்னாள். இந்த 1 1/2 மாதம் முழுவதும் அவன்தான் அலுவலகத்தை நிர்வகிக்க போகின்றானாம். அலுவலக நிர்வாகம் எல்லாம் அவனுக்கு தண்ணிபட்ட பாடாம். நீ வேணா பாரு இந்த ஒண்ணரை மாசத்திலே கம்பெனியை எவ்வளவு தூரம் விரிவடையச் செய்யறான்னு.'' என்று அவனைப் பற்றி அவர் பெருமையாக பேச பேச எரிச்சல் வந்தது, ஸ்வேத்தாவிற்கு.

''அய்யோ, போதுமே அவனோட புராணம். உங்களுக்கு பிடிச்சா விடமாட்டீங்களே. சரி நீங்க பர்ச்சேஸ் பண்ணிட்டு வந்த பொருளையெல்லாம் முதல்ல காட்டுங்க'' என்று பேச்சை மாற்றினாள் ஸ்வேத்தா.

''ஏண்டி, உனக்கு அவனை பிடிக்கல்லையா'' என்று கேட்ட காயத்ரியின் கேள்வியில் வருத்தம் இருந்ததை ஸ்வேத்தா நன்றாகவே கண்டு கொண்டாள், ஆனாலும் பதில் என்ன சொல்வதென்று புரியாத நிலையில் கையில் அகப்பட்ட பார்சலைப் பிரித்து,

''ஐய் இந்த புடவை ரொம்ப அழகா இருக்கு. கிரேப்தானே. இது எனக்கும்மா. சரியா,'' என்று கேட்டு அதை தன் மேல் போட்டு அழகு பார்த்தாள்.



புடவை வெகு அழகாகத்தான் இருந்தது. கருப்பு நிறத்தில் சாம்பல் கலரில் பூக்கள் வெகு நேர்த்தியாக நெய்யப்பட்டிருந்தது. கொழகொழப்பாகவும், விறைப்பாகவும் இல்லாமல் இருந்தது இன்னும் புடவைக்கு அழகு கூட்டியது.

''வாங்கற சேலையெல்லாம், எனக்கு எனக்கு அப்படின்னு எடுத்து பீரோகுள்ள பூட்டிக்கோ, ஒன்றையும் கட்டறது கிடையாது. இன்றைக்கு வாங்கின சேலை எல்லாம் உனக்குத்தான். முதல்ல உன்னோட சுடிதாரையும் ஜீன்ஸையும் ஒரு மூட்டையா கட்டி ஒரு ஓரமா போடு. இனிமே சேலைத்தான் கட்டணும். இது உங்கப்பாவோட ஆர்டர்.'' என்று காரமாக பேசினார், காயத்ரி.

''அஸ்க்புஸ்க் எனக்கு ஒரு சேலையும் வேண்டாம்'' என்று கூறியவள், கையிலிருந்த புடவையையும் சோபாவின் மேல் போட்டாள்.

''ஆசையை பாருங்க. சுடித்ரரையும், ஜீன்ஸையும் மூட்டையா கட்டணும். நான் மாட்டேன்'' என்று அவளும் பிடிவாதமாக சொன்னாள்.

உடனே காயத்ரி இறங்கி வந்தார். ''சரி உனக்கு வேண்டாம், எனக்கும் வேண்டாம். புடவையையும் கட்டணும் அப்புறம் சுடிதாரையும் எப்பவாவது போட்டுக்கோ'' என்றார்.

''இது... சொன்னீங்களே இது சரி. டன்'' என்றாள், ஸ்வேத்தா.

''ஆமா உனக்கு ரொம்ப செல்லம் கொடுத்து கொடுத்து குட்டிச்சுவராக்கிட்டோம். எல்லாம் நீ வைத்ததுதான் சட்டம். இது எங்க போய், முடியப்போகுதோ'' என்று ஆற்றியபடியே டிரஸ்சிங் அறைக்கு சென்றார்.

## 4

அடுத்து வந்த ஒரு வாரமும் நிம்மதியாக சென்றது.

கிஷோரின் நிர்வாகத் திறமையைப் பார்த்து 'ஆ' என்று வாய்பிளந்து நின்றாள், ஸ்வேத்தா.

எங்கிருந்தெல்லாமோ ஆர்டர்கள் கம்பெனிக்கு வந்து குவிந்தன. ஒரே வாரத்தில் இது அனைத்தையும் சாதிப்பது ஒன்றும் சாதாரண விஷயம் அல்ல என்பது ஸ்வேத்தாவிற்கு தெரியும்.

எல்லாவற்றையும் பக்கத்தில் இருந்து பார்த்துக் கொண்டுதானே இருந்தாள். அவன் எதை 'டீல்' பண்ணினாலும் தனக்கென்று ஒரு தனிமுத்திரை வைத்திருப்பதை நன்றாக புரிந்து கொண்டாள், ஸ்வேத்தா.

அலுவலகத்தில் அவன் சொன்ன வேலையை செய்வதுதான் அவள் வேலையாகி போனது. அவனாக ஏதாவது கேட்டாலொழிய அவள் வாயைத் திறப்பதே கிடையாது.

அதை அவனும் உணர்ந்திருக்க வேண்டும். அதனால்தான், சட்டென்று இன்று இந்த கேள்வி.



''அங்கே எப்ப பார்த்தாலும் அப்பா உன்னைப் பற்றித்தான் பேசுகின்றார். ஸ்வேத்தாயிருந்தால் போதும் அவள் இருக்கின்ற இடம் கலகலன்னு இருக்கும் அவள் வாய்திறந்து பேசினால், கேட்டுக் கொண்டே இருக்கலாம். அப்படி இப்படின்னு சொல்றார், நீ, இங்கே அவருடைய சொல்லையெல்லாம் பொய்யாக்கி கொண்டிருக்கின்றாய். நீ திடீரென்று பேசாமடைந்தையாகி போனதற்கு காரணம்,'' என்று சொல்லி நிறுத்திவிட்டு, பின் ''நானா'' என்றுதன்னுடைய பிசிறற்ற குரலில் அழுத்தமாக வினவவும் ஸ்வேத்தா திகைத்தாள்.

என்ன சொல்வது என்று ஒன்றும் புரியவில்லை. இதயம் படபடவென்று காரணமே புரியாமல் வேகமாக அடித்துக் கொண்டது. அவன் தன்னையே கூர்ந்து கவனிப்பதை உணர்ந்து, தான் சகஜமாக இருப்பதாக காட்டிக் கொள்ள பெரும் பாடுபட்டாள். ஏதாவது சொல்லியாக வேண்டும் என்று புரிந்து உளறினாள்.

''அங்கிள் எனக்கு ரொம்ப பழக்கம். அதனாலே இரண்டு பேரும் அப்படி பேசுவோம். நீங்க அப்படியில்லையே. அதோடு உங்ககிட்டே நான் எதுக்கு பேசனும், பேசறதுக்கும் ஒன்றுமில்லை. எனக்கு பிடிச்சாதான் பேசுவேன்'' என்று சிரமப்பட்டு காத்த அமைதியுடன் சொல்லிவிட்டு பல்லை காட்டினாள், ஸ்வேத்தா.

அவளின் பதிலில் அவன் முகம் இறுகுவது போல் ஸ்வேத்தாவிற்கு தெரிந்தது. ஏன் ஏதாவது தப்பாக பேசினோமா? என்று யோசித்தாள். என்ன பேசினோம் என்றே நினைவில் வரவில்லை.

அதன்பிறகு அவன் பேசவில்லை. கையில் இருந்த பேப்பர் வெயிட்டையே உருட்டியபடி அதையே பார்த்துக் கொண்டிருந்தான்.

ஸ்வேத்தாவிற்கு சங்கடமாயிருந்தது. இறுகியிருந்த அவன் முகத்தைப் பார்க்கவே பயமாயிருந்தது. அவன் மேலே ஒன்றும் பேசாதிருந்தது அவளை ஏனோ உறுத்தியது.

''நான் போகலாமா?'' என்று முணங்கியபடி கேட்டாள்.

பதில் வராததைக் கண்டதும், உட்கார்ந்து இருந்த நாற்காலியை தள்ளி, தானும் எழுந்து வெளி நடந்தாள். ஆனாலும் அவனின் இறுகிய முகம் கண்ணை விட்டு அகலவில்லை.

திரும்பத் திரும்ப அவன் முகமே கண் முன் வந்தது. வேலையில் மனம் லயிக்கவேயில்லை. கையை மேஜையின் மேல் வைத்தவள் அப்படியே அதில் குனிந்து முகத்தை கவிழ்த்துக் கொண்டாள்.

சுற்றுப்புறத்தை மறந்த அவளுக்கு கிஷோர் மட்டுமே நினைவில் நின்றான். இன்டர்காம் அலறுவது காதில் கேட்கவே இல்லை.

சிறிது நேரத்தில் யாரோ கதவை திறந்து வரும் அரவம் கேட்டு நிமிர்ந்தவள், கிஷோர் வாயிலை அடைத்துக் கொண்டு நிற்பதைக் கண்டதும், முழித்தாள்.

''என்னப் பண்ணிகிட்டு இருந்தாய்? எவ்வளவு நேரமாக இன்டர்காமில் அழைத்தேன். தூங்குவதற்கு இடம் இதுவல்ல'' என்று அவன் ஒரு முறைப்புடன் கூறவும், ஸ்வேத்தாவிற்கு கோபம் வந்தது.

''நான் ஒன்றும் தூங்கவில்லை..'' என்று ஆரம்பித்தாள். அப்படியானால் இன்டர்காம் மணி அடிக்கும்போது என்ன செய்தேன் என்று முணுமுணுத்த வாயை டப் என்று மூடிக் கொண்டாள்.

''சாரி'' என்று மன்னிப்புக் கேட்டுவிட்டு ''எதற்கு கூப்பிட்டீர்கள்.'' என்று கேட்டாள், ஸ்வேத்தா.

''ரவி இண்டஸ்ரீஸ் கான்ஃபிடென்ஷியல் ஃபைல் எங்கிருக்கின்றது. அப்பா எங்கு வைத்திருக்கின்றார் என்று தெரியவில்லை. நீ வந்து தேடி எடுத்துக்கொடு'' என்று கட்டளையிட்டான் அவன்.

''உங்க ரூமில்தான் இருக்கு'' என்று சொல்லியபடி அவன் பின்னாலேயே சென்றாள்.

அவன் முக இறுக்கம் சற்றும் குறையவில்லை என்று அறிந்து கொண்டாள்.

அறைக்குள் நுழைந்தவுடன் அவளை முன் நடக்கவிட்டு அவன் அவளின் பின்னால் நடந்தான்.

அறையின் ஒரு பகுதியில் வரிசையாக அமைக்கப்பட்டிருந்த வார்டு ரோப்பில்தான் அந்த ஃபைல்லை பார்த்த ஞாபகம் அவளுக்கு. அவளுடைய ஞாபகசக்தி ஒருநாளும் சோடை போனதில்லை.

குறிப்பிட்ட அந்த வார்டு ரோப் புறமாக நகர்ந்தவள் திடீரென்று நினைவு வந்தார்போல ''சாவி'' என்றபடி 'சட்' என்று வேகமாக திரும்பினாள். அவளுடன் பின்னாடியே வந்த கிஷோரின் மேல் அப்படியே மோதவும் செய்தாள். அவளுடைய கன்னம் அவனுடைய நெஞ்சில் மோதவும் சிவந்து போனாள், ஸ்வேத்தா.

சட்டென்று பின்வாங்கியவளை அவனுடைய கரம் தடுத்து நிறுத்தியது. மிக அருகில் அவளுடைய முகத்தை பார்த்தவன் கண்களில் பரிவும், ஆர்வமும் மிகுந்து இருந்தது. அவளும் கண் நிமிர்த்தி அவனைப் பார்க்கும்போது அந்த இரண்டும் மறைந்து கடுமை குடியேறியது.

அவளை சட்டென்று விலக்கி மேஜை பக்கம் நகர்ந்து சாவியை எடுத்து அவள் கையில் கொடுத்தான்.

எதிர்பாராமல் நடந்த நிகழ்ச்சியில் இருந்து ஸ்வேத்தா மீளவேயில்லை. இயந்திரத்தனமாக அவன் கேட்ட ஃபைலை எடுத்துக் கொடுத்துவிட்டு வெளியே ஓட்டமாக வந்துவிட்டாள்.

என்ன ஆச்சு தனக்கு என்றே புரியவில்லை. மார்க்கெட்டிங் பிரிவில் இருந்து தன்னிடம் பேச வந்தவர்களிடம் என்னவோ பேசி அனுப்பினாள். ஒன்றுமே மூளையை எட்டவில்லை. ஊழியர்கள் ஆச்சர்யமாக என்ன ஆச்சு உனக்கு என்பது போல் தங்கள் புருவங்களை உயர்த்துவது புரிந்தது.

பக்கத்தில் போன் மணி அடிக்கவும், கிஷோர் கூப்பிடுகின்றானா என்ற எண்ணத்தில் நெஞ்சு படபடத்தது.

மெல்லிய விரல்களால் ரிசீவரை எடுத்து மெதுவாக ''ஹலோ'' என்று இனிய குரலெழுப்பினாள்.

'''ஸ்வேத்தா'' என்று வசந்தின் குரல் கேட்கவும், மனசு அப்பாடா என்றது.



''என்னண்ணா, அதிசயமா இன்னைக்கு போன், என்ன விஷயம்'' என்று வினவினாள்.

''நாளைக்கு என்ன விசேஷம் அப்படின்னு ஞாபகமிருக்கா. ஒரு நிமிஷம்தான் டைம் தருவேன் கரெக்டா சொல்லு பார்க்கலாம்'' என்றான், அவன்.

அவள் இருந்த நிலையில், அவளுக்கு தானே யார் என்று யோசிக்க வேண்டியிருந்தது. இரண்டு முறை இமை தட்டி யோசித்தவள், அல்லது யோசிக்க முயற்சித்தவள், பின் உதட்டை பிதுக்கிவிட்டு,

''ம்ம் ஊம், ஒன்றுமில்லையே'' என்றாள்.

''அடி... மண்டு நாளைக்கு கல்யாண நாள்'' என்று அவன் மொட்டையாக கூறவும்.

''யாருக்கண்ணா'' என்று கேட்டு வைத்தாள் ஸ்வேத்தா''

''ஆச்.. என்ன ஆச்சு உனக்கு. எப்பொழுதும், நீதான் அப்பா அம்மா கல்யாண நாளை கொண்டாடறதுக்கு அலைவே. இன்னைக்கு என்னடான்னா, யாரோட கல்யாண நாள் அப்படின்னு கேட்கற என்ன ஆச்சு ம்ம்..''

'எப்படி மறந்தேன்' என்றபடி கன்னத்தில் கை வைத்தாள், ஸ்வேத்தா. அப்பா, அம்மா வெட்டிங் டே என்றால் எப்படி கொண்டாடுவாள், அவள், ஒவ்வொரு முறையும் புதிது புதிதாக நிகழ்ச்சிகள் பிளான் போடுவாள். பணம் வேண்டும் என்றால் வசந்திடம் போய் நிற்பாள். இரண்டு பேரும் சேர்ந்து ரகசிய திட்டங்கள் நிறைய போடுவார்கள்.

இந்த ஒரு வாரமாக பெரும்பாலும் கிஷோரின் நினைவும், பேச்சும் - தான் தன்னை ஆக்கிரமித்திருந்திருக்கிறது என்று அவள் உணர்ந்தபோது அவமானமாயிருந்தது.

கன்னத்தில் சிவப்பு ஏறியது. அப்பா அம்மாவின் கல்யாண நாளை மறக்கடிக்கச் செய்கின்ற அளவுக்கு நான் என் நிலையில் இல்லை என்று எண்ணி தன்னையே நொந்தாள்.

''ஏய் ஸ்வேத்தி, என்ன சத்தத்தையே காணோம்: பரவாயில்லைடா எல்லோருக்கும் மறதி, ஒரு கூட பிறந்த வியாதிதான்.' சரி விடு நான் சாயங்காலம் உன்னை வந்து ஆபீசில் பிக்-அப் பண்ணிக்கறேன். ஷாப்பிங் பண்ணிட்டு 'அப்படியே வீட்டிற்கு போகலாம். 5.00 மணிக்கெல்லாம் ரெடியா இரு. வைச்சிடறேன்'' என்று அவன் போனை வைக்கவும், இவளும் ரிசீவரை அதனிடத்தில் வைத்துவிட்டு நாற்காலியில் சாய்ந்து அமர்ந்தாள்.

மனசிலிருந்து கிஷோரின் நினைவுகளை விலக்க முயன்றாள். ஆனால் ஏனோ அவனின் உருவம் அவள் கண்ணில் அழியாக் கோலம்போல் அகலவேயில்லை.

## 5

இரண்டு பேரும் ஷாப்பிங் முடித்துவிட்டு வீடு போய் சேரும்போது

மணி 9.00-க்கு மேல் ஆகியிருந்தது. முத்துசாமியும், காயத்ரியும் தூங்கி விட்டிருந்தார்கள், வசந்த் போன் பண்ணி சொல்லியிருந்ததால் காயத்ரி, ஸ்வேத்தாவை காணோமே என்று தேடவில்லை.

தன்னுடைய அறைக்குள் நுழைந்து, குளித்து உடை மாற்றிவிட்டு வந்தாள், ஸ்வேத்தா.

''ஸ்வேத்தி என்ன சாப்பிடறே. சப்பாத்தி எடுத்து வைக்கவா? இல்லாட்டி சாதம் சாப்பிடறியா?'' என்று கேட்டபடி வந்தாள், ஷைலஜா.

''சப்பாத்தியே எடுத்து வைங்க அண்ணி தொட்டுகறதுக்கு என்ன வைச்சிருக்கீங்க. குருமாவா?'' என்றபடி டைனிங் ஹாலுக்கு போனாள், ஸ்வேத்தா.

அவள் சாப்பிட்டு முடித்துவிட்டு வருவதற்குள் ஹாலில் வசந்த் கடையில் வாங்கி வந்திருந்த சாமான்களை எல்லாம் பரப்பியிருந்தான்.

''நீங்க சாப்பிடலையாண்ணா'' என்று அவனைப் பார்த்து கேள்விகணைத் தொடுத்தாள், ஸ்வேத்தா.

''நீ டிரஸ் மாத்திட்டு வரதுக்குள்ளே நான் சாப்பிட்டு வந்துட்டேன். ஷைலஜா நீயும் வா. ஹாலை அலங்காரம் பண்ணிடலாம்'' என்று தன் மனைவியை அழைத்தான்.

சோபாவில் மணியின் பக்கத்தில் அமர்ந்த ஸ்வேத்தா அவனிடம் பேச்சு கொடுத்தாள்.

''என்ன மணி குட்டிக்கு இன்னைக்கு தூக்கம் வரவில்லையா?''

''ம் ம்'' என்றபடி கையில் இருந்த பலூனை வாயில் வைத்து ஊதினான்.

''ஐய், மணி பலூன் பெரிசா ஊதுறானே. டேய்.. பெரிய ஆளாயிட்டேடா நீ. இன்னும் கூட பெரிசா ஊதலாம் ஊது'' என்று அவனை ஊக்குவித்தாள். அவனும் குஷியாக பலூனை பெரிசாக ஊதவும் பக்கத்தில் இருந்த குண்டூசியை எடுத்து குத்திவிட்டாள்.

'பட்' என்ற சப்தத்துடன் பலூன் உடையவும் மணி பெரிய குரலெடுத்து அழ ஆரம்பித்தான்.

சப்தம் கேட்டு நிமிர்ந்து அவர்கள் இருவரையும் மாறி மாறி பார்த்த வசந்த்தும், ஷைலஜாவும் மீண்டும் குனிந்து ஒன்றும் நடக்காததுப் போல் வேலையை தொடர்ந்தனர்.

இது எப்பொழுதும் நடக்கும் நிகழ்ச்சிதான் ஸ்வேத்தா தானும் சின்னப் பெண் போல மணியுடன் விளையாடுவது அவர்கள் இருவருக்கும் எப்பொழுதும் வித்தியாசமாகவே தெரியாது. காயத்ரி பார்த்தால்தான் அவளை திட்டி தீர்த்து விடுவார்.

சில்வர் பேப்பரை வெட்டி, வீடு முழுவதும் தோரணமாக கட்டி, பலூன்களை ஊதி கட்டி உத்திரத்தில் பறக்கவிட்டு, தோட்டத்தில் உள்ள தொட்டி செடிகளை எடுத்து வந்து அழகாக இடம் பார்த்து வைத்து அது இது என்று எல்லா வேலையும் முடிய நள்ளிரவு 12.30 ஆகிவிட்டது.

''அவ்வளவுதானே அண்ணா. இனி தூங்கப் போகட்டா தூக்கம் வருது'' என்றாள், ஸ்வேத்தா.

எழுந்து நின்று அறையைச் சுற்றி நோட்டம் விட்டவன். ''அவ்வளவுதான் ஸ்வேத்தா. எல்லாம் முடிச்சாச்சு. கேக்கும் ஆர்டர் கொடுத்துட்டேன். நாளைக்கு காலையிலேயே கொண்டு வந்து கொடுத்துடறதா சொன்னான். சாப்பாட்டுக்கு சரவணபவன்லே சொல்லிட்டேன். ஐம்பது பேர்களுக்கு சாப்பாடு ஏற்பாடு பண்ணியிருக்கேன். போதுமில்ல ஸ்வேத்தா.

சிவராஜன் அங்கிள் வீட்டுக்கு போன் பண்ணினேன் அவங்களும் வருவாங்க கிஷோரை கண்டிப்பா அழைச்சிட்டு வரணும்னு சொல்லியிருக்கேன்.

எல்லோரும் அவன் புராணம் பேசறதைக் கேட்டு எனக்கு அவனை பார்க்கணும்னு ரொம்ப ஆசை. ஆமா. நீ ஆபீஸ் போறியா நாளைக்கு, லீவு போட்டுட்டே இல்லே'' என்று முடித்தான் வசந்த்.

அவ்வளவு நேரமும், கடினப்பட்டு, அவனைத் தன்னுடைய நினைவிலிருந்து நீக்கி கொண்டிருந்தவள் இப்பொழுது வசந்த், கிஷோர் என்று பெயர் எழுப்பவும் சட்டென்று ஒய்ந்து போனாள்.

பிறகு வசந்த் பதிலை எதிர்பார்த்து தன்னையே பார்ப்பதை உணர்ந்து.

''ம்ஊம். நாளைக்கு நான் ஆபீஸ் போகவில்லை, ரம்யாகிட்டே லீவ் லெட்டர் கொடுத்திருக்கேன். ஆமா நீங்க ஏன் அவனையெல்லாம் கூப்பிட்டிங்க. நமக்கு சிவராஜன் அங்கிளும், ஆண்ட்டியும்தானே பழக்கம். சும்மா கண்டவனையும் ஏன் கூப்பிடறிங்க. எனக்கு சுத்தமா பிடிக்கவில்லை. வேணா பாருங்க, நாளைக்கு நம்ம வீட்டிற்கு வந்தவுடன், வீட்டை பார்த்து ஏன் இப்படி வைச்சிருக்கிங்க, நாகரீகமா இல்லே, கஜாமுஜான்னு இருக்கு. அமெரிக்காவில் வீடெல்லாம் சூப்பராக இருக்கும். ஒவ்வொன்றும் பிளான் பண்ணி கட்டியிருப்பாங்க அப்படின்னு சொல்லி உங்க மூக்கை உடைப்பான். நல்லா வாங்கி கட்டிக்கோங்க'' என்றாள் சூடாக ஸ்வேத்தா.

''அவனுக்கு அமெரிக்கா பிடிச்சிருக்குன்னா அது அவனோட ரசனை, உரிமை. உனக்கு சென்னைதான் பிடிக்குதுன்னா அது உன்னுடைய விருப்பத்தை காட்டுது. சும்மா காரணமே இல்லாம ஒருத்தர்கிட்டே விரோதம் காட்டக்கூடாது. என்ன புரியுதா? இந்த மாதிரி பேசறதை விடு இனிமே'' என்று சொல்லிவிட்டு, அவ்வளவுதான் என்பது போல் உள்ளறைக்குள் சென்றான், வசந்த்.

ஸ்வேத்தாவிற்கும் புரிந்துதான் இருந்தது. அவனுக்கு சென்னை பிடிக்கவில்லை என்றால் எனக்கு என்ன வந்தது. ஸ்டேட்ஸ்லே போய் செட்டில் ஆகிவிட்டான் என்று காரணம் காட்டி அவனை குற்றம் சாட்டுவது தவறு என்று அவளுக்கும் புரிந்தது. ஆனால் உள் மனது என்ன சொல்லியும் கேட்கமாட்டேன் என்றது.

கன்னத்தை தொட்டு பார்த்தவளுக்கு, காலையில் அவன் மார்பில் மோதியது திரண்டு வந்து அவளை சிவக்க வைத்தது. ஏன் எதற்கு என்று புரியாத குழப்ப நிலையில் படுக்கையில் படுத்தாள்.



# 6

**மா**லை ஆறு மணியிலிருந்தே உறவினர்களும் நண்பர்களும் வந்த வண்ணம் இருந்தார்கள்.

ஸ்வேத்தா ஆரஞ்சு வண்ணலேங்கா சோளி ஆடையில் தேவதைப் போலிருந்தாள். கழுத்தில் முத்து மாலையும், காதில் பொருத்தமான முத்து தோடும், கையில் முத்து வளையல்களும் அணிந்திருந்தாள். அவள் நடக்கும்பொழுதெல்லாம், ஆரஞ்சு வண்ண பாவாடையில் வேலைபாட்டுடன் தைத்திருந்த ஜிமிக்கியும், முத்தும் சலசலத்தன.

காயத்ரி அவளின் தலையில் மல்லிகை பூ சரத்தினை அழகாக அடுக்கினார். பின்பு அவள் கன்னத்தில் இதழ் பதித்து முத்தமிட்டார்.

மணி பஞ்சகச்சம் கட்டிக் கொண்டு அங்கும் இங்குமாக ஓடிக் கொண்டிருந்தான்.

வருபவர்களை வரவேற்றுக் கொண்டிருந்த ஸ்வேத்தாவிடம் திடீரென்று மணி அழுதபடி வந்து நின்றான்.

''டேய் என்னடா இது. டிரஸ் முழுக்க மண் எங்கே போய் விழுந்தாய்'' என்று அவசர அவசரமாக கேட்டாள், ஸ்வேத்தா.

''அத்தே.. நானா விழலே. அந்த ப்ரீதா தள்ளிவிட்டுட்டா'' என்று அவனைவிட ஒரு வயசு சின்னப் பெண்ணை சுட்டிக்காட்டினான்.

''அதுசரி, நீ அவளை என்ன பண்ணினாய்'' என்று அவனுடன் நடந்தபடி பேச்சுக் கொடுத்தாள்.

''நான் ஒன்னுமே செய்யவில்லை, அவ கையிலே இருக்க பொம்மையை பாரு அத்தை. அசிங்கமாதானே இருக்கு'' என்று தலையை சொரிந்தபடி கேட்டவன் அவளிடம் பதிலை எதிர்பாராமல் தொடர்ந்தான்.

''உன்னோட பொம்மை உன் மாதிரியே அசிங்கமா இக்குன்னுதான் சொன்னேன். உடனே தள்ளிவிட்டுட்டா அப்பறம் நான் கீழே மண்ணுல விழுந்துட்டேன்'' என்று சொல்லி அழுக்கான சட்டையை குனிந்து பார்த்து மீண்டும் அழுதான்.

''சரிவா, உனக்கு டிரஸ் மாத்தி விடறேன். அழுறதை நிறுத்து. அம்மா பார்த்தா திட்டுவாங்க. ஜீன்ஸ் போட்டுகறியா'' என்று அவனிடம் பேசியபடி உள் சென்றாள்.

அவள் அவனுடைய உடை மாற்றிவிட்டு வெளியே வந்தபோது.

அவன் வருவானா, வருவானா? என்று கண்வலிக்க அவள் எதிர்பார்த்துக் கொண்டிருந்த கிஷோருக்கு ராஜ உபச்சாரம் நடந்து கொண்டிருந்தது.

சோபாவில் வசதியாக கால் ஆட்டி உட்கார்ந்து இருந்த சின்னப்பெண்ணை எழுப்பிவிட்டு கிஷோரை உட்காரச் சொல்லிக் கொண்டிருந்தார், காயத்ரி. அவன் உட்கார மறுத்து ஏதோ சொல்லிக்



கொண்டிருப்பது அவளுக்கு தெரிந்தது.

அதற்குள் வசந்தும் எங்கிருந்தோ வந்து அவசர அவசரமாக கிஷோரிடம் கை குலுக்கினான்.

சினேக பாவமான கிஷோரின் புன்முறுவல், ஸ்வேத்தாவை ரசிக்கத் தூண்டியது.

''அத்தே யாரை அப்படி உத்துப் பாக்கறே அந்த அங்கிளையா'' என்று கைநீட்டி கிஷோரை சுட்டிக்காட்டினான் மணி.

ஸ்வேத்தாவிற்கு ஒரே வெட்கமாகிப்போனது. சின்னப்பையன் விசாரிக்கும் அளவுக்கு நான் அப்படியா வெளிப்படையா உற்றுப்பார்த்தேன். என்று தனக்குள் வெறுத்தவள். மணி கேட்டதற்கு பதில் ஒன்றும் சொல்லாமல் அவனை தூக்கிக் கொண்டு மெல்ல நடந்தாள், ஸ்வேத்தா.

''என்னம்மா ஸ்வேத்தா எப்படி இருக்கின்றாய்'' என்று பக்கத்திலிருந்து குரல் வரவும் சட்டென்று திரும்பி பார்த்தாள். கீதா, கிஷோரின் தாயார் அங்கு புன்னகையுடன் நின்றிருந்தார்.

''வாங்க ஆண்ட்டி, நான் நல்லா இருக்கேன். நீங்க எப்ப வந்தீங்க. நீங்க வந்ததை பார்க்கவே இல்லை'' என்று சொல்லியபடி மணியை கீழே இறக்கினாள். பின்பு அவரின் கையை பிடித்து அழைத்துக் கொண்டு நடந்தாள். ரோஸி வருவதைப் பார்த்தவுடன் அவளையும் தங்களுடன் சேர்த்துக் கொண்டாள்.

அப்பாவும் அம்மாவும் 'கேக்' வெட்டி முடித்தவுடன், வந்தவர்களை சாப்பிட மொட்டைமாடிக்கு அழைத்துச் சென்றாள்.

முடிந்தவரை கிஷோரை நேருக்கு நேர் சந்திப்பதை தவிர்த்தாள். அவன் முன் வாசலில் காற்றோட்டமாக சோபாவில் அமர்ந்து, அப்பா, அங்கிள், வசந்துடன் அரட்டை அடிப்பதைப் பார்த்து அந்தப் பக்கமே போகாமல் பின்வாசலையே பயன்படுத்தினாள்.

தவறியும் முன் பகுதிக்கு போகவில்லை. அதுவும் தவிர, வீட்டின் உள்புறம் பெண்கள் கூட்டம் வாசற்புறம் ஆண்கள் கூட்டம் என்றாகிவிட அவளுக்கு அங்கு செல்ல வேண்டிய அவசியமும் ஏற்படவில்லை.

நேற்று நடந்த சம்பவம் ஏதோ ஒரு ஏதேச்சையான சின்ன விசயம் என்று ஒதுக்கித் தள்ள முடியவில்லை. திரும்பத் திரும்ப அவன் மீது மோதியதே 'பிளாஸ்பேக்' ஆக கண்ணில் வந்து வந்து மறைந்தது.

ஏதோ நான் வேண்டுமென்றே மோதியதுப்போல அவன் குற்றம் சாட்டி அவளைப் பார்த்தது போல் இருந்தது, ஸ்வேத்தாவிற்கு. அந்த பார்வையில், தான் ஏதோ தவறு செய்துவிட்டது போல தோன்றியது.

தவறு செய்துவிட்டு ஒளிந்து கொள்ளும் சின்னப்பிள்ளையைப் போல்தான், நானும் ஒளிந்து கொண்டிருக்கிறேன் என்று எண்ணியவளுக்கு தன்னிடம் கோபம் வந்தது. நேற்று முழுவதும் அவன் முகம் 'உர்' என்று ஓர் இறுக்கமுடன் இருந்தது அவளைத் தவிக்கத்தான் வைத்தது.

''ஸ்வேத்தா'' என்ற காயத்ரியின் அழைப்பு கேட்கவும்,

''என்னம்மா'' என்றாள் ஸ்வேத்தா.

''இங்கே பாரேன் இந்த ப்ரீதா குட்டி ரொம்ப அழுகின்றது. கீழே நீ



கட்டி வைத்திருக்கின்ற பலூன் வேண்டுமாம். இல்லாட்டி சாப்பிடமாட்டேன் என்று ஒரே அடம். கொஞ்சம் கீழே போய் நாலைஞ்சு பலூன் எடுத்திட்டுவா'' என்று அவளிடம் சொல்லிவிட்டு மீண்டும் அந்த குட்டியிடம் திரும்பி சமாதானம் செய்து கொண்டிருந்தார் அவர்.

கீழே இறங்கி, தன்னுடைய அறைக்குள் நுழைந்து, மேஜை டிராயரை திறந்து சின்ன உறையிலிருந்த பலூனை உறையோடு கையில் எடுத்துக் கொண்டு முன்னால் விழுந்த துப்பட்டாவை சரி செய்து கொண்டே நடந்தவள், யாரோ வழியை மறைப்பது போல் நின்று கொண்டிருப்பதைப் பார்த்து நிமிர்ந்தாள்.

மார்பின் குறுக்காக கையை கட்டிக் கொண்டு தலையை லேசாக சரிந்து, கண்களால் சிரித்தபடி நின்று கொண்டிருந்த கிஷோரைப் பார்த்தவுடன் அவள் வயிற்றில் பல பட்டாம் பூச்சிகள் சிறகடித்தன.

என்ன செய்வது என்று ஒன்றும் புரியாமல், இதழ் பிரித்து ''வாங்க'' என்று மொழிந்தாள், ஸ்வேத்தா.

''அப்பப்பா, ரொம்ப சீக்கிரமாய்தான் என்னை வரவேற்கின்றாய்'' என்று ஆச்சர்யப்படுகின்றவன் போல் புருவத்தை உயர்த்தினான்.

அவன், அவளுக்கு மிக அருகில் நின்றதால் ஸ்வேத்தாவினால் இயல்பாக பேசமுடியவில்லை.

அவனுக்கு என்ன பதில் சொல்ல வேண்டும் என்று புரிபடவில்லை. கண்களை தட்டி விழித்தாள். ஆனால் அவனும் அதற்குள்ளாக.

''நான் கிளம்பவேண்டும். ஆண்ட்டிகிட்டே சொல்லிவிட்டு போகலாம் என்று வந்தேன். ஆண்ட்டி எங்கே?'' என்று அவளிடம் கேட்டான்.

''கிளம்பறீங்களா? இன்னும் சாப்பிடவில்லையே'' என்று அவசர அவசரமாக கேட்டபடி அவனைத் தாண்டி நகர்ந்தாள்.

நகர்ந்தவளின் கையை அவனுடைய நீண்ட வலிய கரங்கள் தடுத்தது.

''இல்லை ஸ்வேத்தா, நான் இப்பொழுது கிளம்பவேண்டும். என்னுடைய நண்பர்கள் இன்று மதியம்தான் அமெரிக்காவில் இருந்து வந்திருக்கின்றார்கள். அவர்களை நான் இரவுச் சாப்பாட்டிற்கு வெளியே அழைத்துச் செல்வதாக கூறியிருக்கின்றேன். இப்பொழுதே ரொம்ப நேரம் ஆகிவிட்டது. எனக்காக அவர்கள் காத்துக் கொண்டு இருப்பார்கள்'' என்று தெளிவாக கூறினான் அவன்.

''அட்லீஸ்ட் நீங்க ஐஸ்'' என்று அவள் பேசியபடி நடக்க முற்பட்டபோது,

'பட்' என்ற சப்தத்துடன் அவள் கட்டிவைத்த பெரிய பலூன் ஒன்று ஓசையுடன் வெடித்தது.

திடீரென்று வெடித்த ஓசையில் ஸ்வேத்தா லேசாக தடுமாறினாள். அருகிலேயே நின்றிருந்த கிஷோர் அவளை தாங்கிப் பிடித்தான்.

பிடித்தவன் பிடியை விடவே இல்லை. வழவழப்பான இடுப்பில் கைவைத்து அவளை இன்னும் அருகில் இழுத்து, அவள் முகத்தை நிமிர்த்தி தன்னுடைய கூர்மையான விழிகளால் அளந்தான்.

பழக்கமில்லாத நெருக்கத்தில் ஸ்வேத்தா திமிரத் துவங்கினாள்.

''உஷ் என்ன இது கிஷோர் ப்ளீஸ் விடுங்க'' என்று அவன் மார்பில் கைவைத்து தள்ளினாள்.

அவனோ அவளை சுலபமாக தன்னுள் அடக்கி கொண்டு,

''விண்ணுலகத்து தேவதைப் போல் ஜொலித்துக் கொண்டிருக்கிறாய் நீ, என்பது தெரியுமா உனக்கு'' என்று அவன் அவளுடைய மென்மையான செவியில் உதட்டை அழுத்தி சொல்ல,

ஸ்வேத்தாவிற்கு இதயம் எம்பி குதித்துவிடுவது போல படபடவென்று அடித்தது. அவனுடைய பரந்த மார்பில் தலை சாய்க்க வேண்டும் என்று எழுந்த ஆவலை அடக்கி நிதானம் காட்டி பேசினாள்.

''ப்ளீஸ் விடுங்க கிஷோர் யாராவது பார்த்தால் என்ன நினைப்பாங்க'' என்று மூச்சு விடாமல் ஒப்பித்தாள், ஸ்வேத்தா.

அவனோ அவள் சொன்னதை காதில் வாங்காமல் அவளின் முகம் நோக்கி குனிந்தான்.

''இப்ப என்னை விடவில்லை என்றால் நான் கத்துவேன்'' என்று திமிறியபடி மிரட்டினாள், ஸ்வேத்தா.

அவளுக்கு பயத்தில் வேர்வைத்துளிகள் முகம் முழுவதும் பூக்கத் துவங்கின.

அதேசமயம் ''ஸ்வேத்தா'' என்று அழைத்தபடி மாடியில் இருந்து காயத்ரி வருவதை உணர்ந்ததும், அவனின் பிடி லேசாக தளர்ந்து வேகமாக நகர்ந்துவிட்டாள் ஸ்வேத்தா.

''என்ன ஸ்வேத்தா, ஒரு பலூன் எடுத்துட்டு வர இவ்வளவு ரேநமா? பொறுப்பே இல்லை உனக்கு'' என்று முணுமுணுத்தார் காயத்ரி.

ஸ்வேத்தா அதை எல்லாம் உணரும் நிலையில் இல்லை. இன்னமும் நெஞ்சம் படபடப்பது அடங்கவில்லை அவளுக்கு.

'என்னைப்பற்றி என்னவென்று நினைத்தான், சும்மா, இழுத்த இழுப்பிற்கெல்லாம் ஆடும் பெண் என்று நினைத்தானா?' என்று கறுகறுவென்று கோபம் ஏறியது.

'எனக்கெங்கே அறிவு போனது. கை நீட்டி ஒரு அறை வைத்திருக்க வேண்டாமா?'

'எனக்கு ஏன் இந்த தயக்கம். எப்படி இடம் கொடுத்தேன்' என்று தனக்குள்ளே மருகியவளுக்கு கண்களில் குளம் கட்டியது. கூடவே அவனின் அணைப்பும் நினைவில் வந்து அவளை மருள வைத்தது.

''ஸ்வேத்தா'' என்று பின்புறத்தில் இருந்து வந்த குரலில், தன்னிலை உணர்ந்து கண்ணீரைச் சுண்டி விட்டாள்.

''குழந்தைகளுக்கு கொடுக்கணும் என்று வாங்கி வைத்த 'பென்சில் டப்பா' எங்கே வைத்தாய், கொஞ்சம் கீழே வந்து எடுத்துக் கொடும்மா'' என்றாள் ஷைலஜா.

''ம்... ம்ம்... நீங்க கீழே போங்க அண்ணி, பின்னாலேயே வரேன்'' என்று சொல்லி அவளை அனுப்பிவிட்டு கை குட்டையால் முகத்தை அழுந்த துடைத்துவிட்டு அவளும் கீழே இறங்கினாள்.



எந்த வேலையை செய்தாலும், யாருடன் பேசினாலும், மனதில் பதியாமல் போனது. மீண்டும் மீண்டும் செக்குமாடு போல அவன் நினைவு வந்து அவளை துன்பப்படுத்தியது.

ஏன் அவனுக்கொரு சந்தர்ப்பம் ஏற்படுத்தினேன். ஏன் தொடவிட்டேன் என்று தனக்குள்ளாகவே ஆயிரத்தொரு முறை கேட்டு இருப்பாள். பதில் கிடைக்காமல் திணறினாள்.

வெளிநாட்டில் தங்கி வேலை பார்ப்பவனுக்கு இந்த விஷயம் சர்வசாதாரணம். அவனை எந்த விதத்திலும் பாதிப்பை ஏற்படுத்தி இருக்க போவதில்லை என்று எண்ணியவளுக்கு திடீரென்று அவளுடைய நெகிழ்வு ஞாபகத்தில் வந்து திகிலையூட்டியது.

பின்னே அதை அவன் உணர்ந்திருந்தால் என்னவென்று நினைத்திருப்பான். சுலபமான பெண் நம் இஷ்டத்திற்கு வளைத்துவிடலாம் என்றல்லவா எண்ணியிருப்பான். என்றெல்லாம் சிந்தித்து அஞ்சினாள், அழகிய ஸ்வேத்தா.

அவன் ஒருவன் தான் தன்னை தடுமாற வைக்கிறான். தன் நிலை மறக்க வைக்கின்றான் என்று அவளின் மூளை மெல்ல மெல்ல அவளுக்கு உணர்த்தியது.

ஏன், எதற்கு என்று அதற்கு மேல் சிந்திக்க பயந்து படுக்கையில் படுத்த அவள் அப்படியே உறங்கிப் போனாள்.

## 7

**கா**லையில் எழும்பியவளுக்கு அன்று பொழுது ஏன் விடிந்ததோ என்று இருந்தது. அலுவலகத்திற்கு செல்ல துளி கூட விருப்பம் இல்லை. அவனை எப்படி எதிர்நோக்குவது என்பதே பெரிய விஷயமாக மனதில் நின்றது.

நேற்றைய நிகழ்ச்சியின் தொடர்பாக ஏதேனும் அவன் பேசினால் தன்னால் தாங்க முடியாது என்று உறுதியாக புரிந்து போயிற்று.

மிக மெதுவாக 'அரக்க பரக்க' என்று பறக்காமல் கிளம்பி, அலுவலகத்திற்கு அவள் வந்து சேரும்போது மணி 10.00 ஆகியிருந்தது.

இயந்திரத்தனமாக, நேற்று வராததினால் தேங்கி போயிருந்த வேலையெல்லாம் அவள் செய்து கொண்டிருக்கும்போது பக்கத்திலிருந்த 'இண்டர்காம்' அலறியது.

நடுங்கும் விரல்களால் அதை எடுத்தவள் ''ஹலோ'' என்று குரல் கொடுத்தாள்.

''ஒரு நிமிடம் உள்ளே வா ஸ்வேத்தா'' என்று அவனுடைய அதிகாரக் குரல் ஆரவாரமின்றி ஒலித்துப் பின் அடங்கியது.

முடிந்த அளவு நிலைபடுத்திய ஒரு நிதானத்துடன் அவனுடைய அறைக்குள் நுழைந்த ஸ்வேத்தாவின் நெஞ்சம் அவனைப் பார்த்த கணத்தில் அலைபாய தொடங்கியது.



அவன் ''நேற்று...'' என்று ஏதோ பேச முற்பட,

ஸ்வேத்தாவிற்கு அவமானம் பிடிங்கித் தின்றது. நேற்று நிகழ்ந்த நிகழ்ச்சிக்கு விளக்கம் சொல்லப் போகின்றானா? அதை வேறு இவன் வாயால் கேட்க வேண்டுமா? என்று கூச்சத்தில் ஆத்திரம் வந்தது.

அவனுக்கு மேலே பேச சந்தர்ப்பம் தரக்கூடாது என்று விளங்க, தன்னிச்சையாக அவளுடைய கை வேகமாக அவன் கன்னத்தில் இறங்கியது.

''நேற்று எனக்கு அடிக்க வாய்ப்பே இல்லாமல் போய்விட்டது'' என்று இவள் அவனுடைய கண்களை சந்திக்க பயந்து இறுகிய உதட்டை, பார்த்தபடி தைரியமாக பேசி, கடகடவென்று அந்த அறையை விட்டு வெளியேறினாள். தன்னுடைய தனி அறையில் நாற்காலியில் அமர்ந்து ஸ்வேத்தாவிற்கு இப்போதுதான் மனசு சிறிது நிம்மதியடைந்தார் போல தோன்றியது.

''அப்பாடா'' என்றபடி நாற்காலியில் சாய்ந்து அமர்ந்தவள், இனிமேல் என் விஷயத்தில் அவன் ஜாக்கிரதையாக நடந்து கொள்வான் என்று மனதினுள் சொல்லிக் கொண்டாள்.

கண்மூடி தன்னுடைய வெற்றியை கொண்டாடி மிதமான புன்னகையுடன் மெதுவாக கண்மலர்த்திய ஸ்வேத்தா, எதிரில் தன்னையே உறுத்துப் பார்த்துக் கொண்டு இருப்பவனைக் கண்டதும் அதிர்ந்துப் போனாள். ஆனால் உடனடியாக சமாளித்துக் கொண்டு,

''என்ன? என்ன வேண்டும் உங்களுக்கு. ஒரு கன்னத்தில் அறைந்தால் ஏசுநாதர் பாணியில் மறு கன்னத்தையும் காட்டி வந்திருக்கிறீர்களா? எனக்கு ஒரு ஆட்சேபனையும் இல்லை'' -என்று நக்கல் கலந்த குரலில் வீரத்துடன் பேசினாள் ஸ்வேத்தா.

பதிலொன்றும் பேசாமல் அவளருகில் போய் நின்றவன் அவளை தன்னுடைய கை பிடித்து தூக்கி நிறுத்தி, அவளின் முகத்தை நிமிர்த்தி, அவளுடைய கண்களை ஊடுறுவிப் பார்த்தான்.

கடுகடுத்த அவனின் பார்வையை தாங்க முடியாமல், விழியை தாழ்த்தினாள் ஸ்வேத்தா. அவளின் வாய் பேச்சில் இருந்த வீரம், உணர்வில் இல்லை.

ஏதோ நடக்கப் போகின்றது என்று உள்ளுணர்வு எச்சரித்தது.

அவளையே கோப விழிகளால் மேய்ந்தவனின் பார்வை அவளைப் பார்க்க பார்க்க மாறிப்போனது. அவளைத் தன்னுடன் இழுத்தவன் குனிந்து அவள் செவ்விதழில் மென்மையாக முத்தமிட்டான். பிறகு அவளுடைய கழுத்து வளைவில் முகம்புதைத்து தாழ்ந்த குரலில் ஏதோ முணுமுணுக்கவும் செய்தான்.

ஸ்வேத்தா, தனக்குள் என்ன மாற்றம் நிகழ்கின்றது என்று புரியாமல், அவனை எதிர்க்கும் சக்தியும் இல்லாமல் மலைத்து, முகம் சிவந்து நின்றாள்.

அதற்குள் மேஜையின் மேல் இருந்த தொலைபேசி கிணுகிணு என்று மணி அடிக்கவும், கிஷோர் அவளை மெல்ல தன்னிடம் இருந்து விலக்கினான். அவளின் சிவந்த முகத்தை கண்டு கொண்டவன் சற்றும் குறையாத குரலில்,

''உன்னால் முடிந்தால் இதற்காக என்னை அடித்துப் பார்'' என்று சவால் விட்டு சென்றான்.



கடவுளே... இது எல்லாம் நான் காணும் கனவா இருக்க வேண்டும். கனவாக மட்டுமே இருக்க வேண்டும் என்று ரொம்பவும் வேண்டி, கையை கிள்ளிப் பார்த்து அது வலிக்கவும், ஒரே அழுகையாக வந்தது. ஸ்வேத்தாவிற்கு.

ஏன் இவன் எப்பொழுதும் என்மனசு வலிக்கின்ற மாதிரியான செய்கைகளையே செய்கின்றான்?

ஏன் என்னுடைய கண்ணீரெல்லாம் இவனுடைய நினைப்பிலேயே கரைகின்றது என்று அவளுக்கு வேதனையாக இருந்தது.

அவனின் செய்கையை நினைத்தால் அவமானமாக இருந்தது. கூட சேர்ந்து அவளும் அவன் செய்கைக்கு துணை போனதை நினைத்து எரிச்சலாக வந்தது.

இதற்கு மேலும் எப்படி இங்கே பணிபுரிய முடியும்? அவனை எப்படி எதிர்நோக்க முடியும். என்னைப் பார்த்து இளக்காரமான உதட்டை சுழித்து நகைத்தால் அதை எப்படி தாங்க முடியும். அதைவிட அவனைப் பாராமல் இருப்பதே உத்தமம் என்ற முடிவோடுதான் அன்று அலுவலகத்தில் இருந்து வீடு வந்து சேர்ந்தாள்.

அடுத்து வந்த மூன்று நாட்களும் அலுவலகம் செல்லவில்லை. எந்த மாதிரியான விடுப்பு கடிதமும் அலுவலகத்திற்கு அனுப்பவும் இல்லை.

வீட்டில் எல்லோரிடமும், ''சும்மா போகவில்லை, தினமும் போறதாலே ஒரே பேர், அலுப்பா இருக்கு. ஒரு மாற்றத்துக்கு வீட்டில் இருந்து பார்க்கலாம்'' என்று மென்று முழுங்கினாள்.

வீட்டில், வேண்டாத வீண் நினைவிலே பொழுதை போக்கி தன்னை கஷ்டப்படுத்திக் கொண்டாள்.

தன் நிலையை எண்ணி எண்ணி நொந்தாள்.

நான்காம் நாள் காலையிலேயே சிவராஜன் ஸ்வேத்தாவைப் பார்க்க வீடு தேடி வந்துவிட்டார்.

அவர் வருவார் என்று ஸ்வேத்தா சற்றும் எதிர்பார்க்கவில்லை அதனால் என்ன பதிலை சொல்லுவது என்று புரியாமல் நன்றாகவே விழித்தாள்.

''என்னம்மா ஸ்வேத்தா, மூணு நாளாக ஆபீஸுக்கு வரவில்லையாமே. நேற்று சாயங்காலம்தான் கிஷோர், சொன்னான். நீ கோபமாக இருக்கின்றாய், என்று விஷயமும் சொன்னான்'' என்றார் மிருதுவாக.

'பகீர்' என்றது ஸ்வேத்தாவிற்கு. 'விஷயம் சொன்னானா?'

''என்ன சொல்றீங்க அங்கிள்'' என்று வேகவேகமாக கேட்டாள்.

''சின்ன விஷயத்துக்கெல்லாமா சண்டை போட்டுட்டு விடுப்பு எடுப்பாங்க. ம்.ம்.. சரி சரி அதை விடு நீ சிபாரிசு செய்த பெண்ணிற்கே அந்த ப்ரோகராமர் வேலை கொடுத்துடறதா முடிவு பண்ணியாச்சும்மா கிஷோர் வேண்டுமென்றே உன்னை கிண்டிப் பார்ப்பதற்காக வேற யாருக்கோ கொடுக்க போறதா பொய் சொல்லியிருக்கான். எப்பவும் உன்னோட சிபாரிசுக்குத்தான் மதிப்பு அதிகம். இது தெரியாமல் இதற்குப் போய் கோவித்துக்கிட்டு வராம இருக்கலாமா? ஒழுங்கா நாளைக்கு ஆபீஸுக்கு வந்துசேர்'' என்று ஆணைப் பிறப்பித்து விட்டு சென்றார், சிவராஜன்.

ப்ரோகரமரா? வேலையா? சிபாரிசா? ஏன் இப்படி அவன் பொய்

சொல்லி அங்கிளை அனுப்ப வேண்டும் என்று ஆச்சர்யமாக இருந்தது ஸ்வேத்தாவிற்கு.

அங்கிள் சொன்னால் தன்னால் மறுக்க முடியாது என்று அவரை அனுப்பியிருக்கிறான் என்று ஊகித்துக் கொண்டாள். ஒருவேளை தான் செய்தது தவறு என்று உணர்ந்து மன்னிப்புக் கேட்பானா?

மன்னிப்பு கேட்டால் சும்மா விட்டு விடக்கூடாது. நாக்கைப் பிடுங்கி கொள்கிறார் போல அசிங்கமாக திட்ட வேண்டும். எவ்வளவு தைரியம் இருந்தால் என்னை... என்ன... என்று எண்ணியவளுக்கு அதற்கு மேல் நினைக்கத் தயக்கமாக இருந்தது.

அங்கிள்லே வீட்டுக்கு வந்து சொல்லிவிட்டு போயிருக்கின்றார். இதற்கு மேல் அலுவலகத்திற்கு போகாமல் இருப்பது நல்லதில்லை என்ற முடிவோடு அடுத்த நாள் வழக்கம் போல் அலுவலகம் சென்றாள்.

இவளைப் பார்த்தவுடன் கிஷோர் பார்த்த பார்வையில் அவளுக்கு வயிற்றை பிசைந்தது.

அவன் மன்னிப்புக் கேட்பான் என்று கர்வமாக வந்தவள், ஏதோ நீ தான் தவறு செய்தாய் மன்னிப்பும் நீதான் கேட்க வேண்டும் என்ற ரீதியிலான அவனின் பார்வையில் குழம்பினாள்.

அவளையே விழி மின்ன பார்த்துக் கொண்டிருந்தவன், பின்பு வசதியாக சேரில் சாய்ந்துதான் பிறகு ''தென்...'' என்று இழுத்தான்.

ஸ்வேத்தாவிற்கு சாவி கொடுத்தது போல் மார்பு படபடவென்று வேகமாக அடித்துக் கொண்டது. என்ன கேட்கிறான் என்று புரியாமல் எரிச்சல் வந்தது.

அதே எரிச்சலில் நிமிர்ந்து எதிரில் அமர்ந்திருப்பவனை முறைத்தாள்.

''நெருப்புக்கோழி, தலையை மட்டும் நிலத்துல புதைச்சுகிட்டு ''ஆகா'' நாம ஒளிஞ்சுகிட்டோம். யாராலையும் இனிமே நம்மை கண்டுபிடிக்க முடியாது அப்படின்னு நினைச்சுக்குமாம். உனக்கு தெரியுமா?'' என்றான் சுருக்கமாக.

அவன் என்ன சொல்ல வருகிறான் என்று புரிந்து போனது ஸ்வேத்தாவிற்கு.

''எதையும் எதிர்நோக்கும் மன தைரியம் வேண்டும் ஸ்வேத்தா. கோழையைப் போல் ஒளிந்து கொள்ளக்கூடாது. ஒளிந்து கொள்வதால் எந்த பிரச்சனைக்கும் விடிவு வந்துவிடப் போவதில்லை'' என்று சொல்லி நிறுத்திவிட்டு அவளை நோட்டம் விட்டான்.

ஸ்வேத்தா அதற்குள் தன்னை நிதானப்படுத்திக் கொண்டாள் கிடைத்த ஒரு வினாடிக்குள் என்ன பேசவேண்டும் என்று மனதில் ஒத்திகை பார்த்துக் கொண்டாள்.

இருந்திருந்து அவன் எனக்கு அறிவுரை சொல்லணுமா? அவளுடைய மனக்கலக்கத்தை பிட்டுபிட்டு வைக்க வேண்டுமா? வெற்றி பெற்றவன் போல் அவன் கர்வமாக அமர்ந்திருப்பதின் காரணம் புரிபட்டு விட அதை உடைக்கும் முயற்சியில்.

''நீங்க என்ன சொல்றீங்க? ஒன்றும் புரியவில்லை. நெருப்புக்கோழி



நிலம், கோழை, தைரியம். இது எல்லாம் எதற்காக விளக்கம்'' என்று ஒன்றும் புரியாத தினுசில் கேட்டு அவனை திகைக்க வைத்தாள்.

''மூன்று நாள், எனக்கு ஜலதோஷம் ப்ளஸ் ஜுரம் அதனால் ஆபீஸுக்கு வரமுடியவில்லை விடுப்பு கடிதம் அனுப்பினேனே வரவில்லையா?'' என்று அவள் புளுக,

அவள் புளுகுவதை புரிந்து கொண்ட விதத்தில், தலைமுடியை விரல்களால் கோதி பின்னுக்கு தள்ளியபடி,

''பரவாயில்லையே.'' என்று ஆச்சர்யம் காட்டினான்.

அதற்குள் தொலைபேசி சிணுங்கவும் அதற்கு கைகொடுத்தவன், எதிர்முனையில் குரலை உணர்ந்தவுடன் சந்தோஷித்தான். பின்பு பிரகாசித்தான்.

''ஜேசிக்கா. வாவ் ஃப்ளசன்ட் சர்ப்ரைஸ். எப்ப வந்தாய்? என்ன விஷயம் ஓ... சேச்சே... ஹே நோ... நோ அப்படியெல்லாம் இல்லை. ஹெல்... ஸ்டாப்திஸ்.

ஸ்டாப்திஸ்'' என்று கூறி சத்தம் போட்டு சிரித்தவன், நினைவு வந்தார்போல ஸ்வேத்தாவைப் பார்த்தான்.

அதுவரை, சிரிப்பில் அவன் முகம் மாறின அழகை ஒருவித பிரமிப்போடு பார்த்துக் கொண்டிருந்த ஸ்வேத்தா, சட்டென்று பார்வையை தழைத்தாள்.

ஆனால் அவன், அவள் பார்த்ததைக் கண்டு கொண்டான் என்று உடனேயே அவளிடம் பேசின பேச்சில் புரிந்தது.

''ஓகே ஜேசி. நாளைக்கு. சரி கட்டாயம். ஹோட்டல்லே ரூம் போடாதே. நேரா வீட்டிற்கு வந்து சேர்'' என்று பணித்துவிட்டு தொலைபேசியை வைத்தவன் பார்வை ஸ்வேத்தாவைப் பார்த்தவுடன் கூர்மை பெற்றது.

பிறகு கையை உயர்த்தி காலரை தூக்கி விட்டவன், மெதுவாக

''நான் எட்டாவது உலக அதிசயமாக இருப்பேனா என்று சந்தேகமாக இருக்கிறது'' ன்றெு சம்பந்தம் இல்லாமல் பேசினான்.

அவனுடைய கண்களில் மின்னிய பரிகாசத்தைக் கண்டவள், ஆனால் காரணத்தை உணர முடியாமல், இது என்ன புதுசா பீத்தல், உலக அதிசயமாமே என்று தனக்குள் வியந்து, பின், ''என்னது'' என்று விழி விரித்துக் கேட்டாள்.

''பின்னே. இப்போ சில நிமிஷங்களுக்கு முன்னால் நீ ஏதோ அதிசயத்தை கண்டதைப் போல் என்னை இமைக்காமல் பார்த்ததைக் கண்டுதான் எனக்கு இந்த சந்தேகமே வந்தது'' என்று கண்களில் குறும்பு கொப்பளிக்க அவன் கேட்க,

இவன் தலையில் 'இடிவிழ' என்று மெல்ல முணுமுணுத்த ஸ்வேத்தா. முகம் சிவந்து போனாள். எதிலாவது முகத்தை புதைத்துக் கொள்ள வேண்டும் போல் மனசு பரபரத்தது. வெட்கத்தில் அழகிய கன்னம் குளிர்ந்தது.

எதிரில் அமர்ந்திருப்பவன், நொடியில் மாறின அவள் முக மாற்றங்களையெல்லாம் கண்டு அயர்ந்து, அவளை விழுங்கி விடுவதைப் போல் பார்ப்பதை ஸ்வேத்தா உணரவே இல்லை.

'இடியட்' என்று தன்னுள் சொன்னவன், கோபத்தோடு மிக தாழ்ந்த

குரலில் ஏதோ பிரார்த்தனை செய்வது போல் கண்மூடி முணுமுணுத்தான். பின் நீண்ட மூச்சை உள்ளிழுத்து வெளிவிட்டவன் பிறகு,

''இனி நீ போகலாம் ஸ்வேத்தா'' என்று குனிந்து மேஜையின் கண்ணாடி மேற்பரப்பை பார்த்தபடி பேசினவனின் குரல் விறைத்திருந்தது.

''இனி அப்பாவிடம் பேசிவிட வேண்டும்'' என்று சிந்தனை செய்த வண்ணம் சன்னல் திரை சீலையை ஒதுக்கிவிட்டு சாலையை வெறித்தான்.

தன்னுடைய அறையில் வந்து அமர்ந்த ஸ்வேத்தாவிற்கு அப்போதே உயிர் சென்று விடாதா என்றிருந்தது. 'இவன் முன்னால் எப்பொழுதுமே அவமானப்பட வேண்டும் என்று எனக்கு எழுதியிருக்கின்றதா?' என்று எரிச்சல் பட்டாள்.

இருந்தாலும் எனக்கு எங்கே அறிவு போனது. இதுவரை யாரும் சிரித்து நான் பார்த்ததில்லையா? எனக்கு வேணும். அது என்ன பட்டிக்காட்டான் மிட்டாய் கடையை பார்க்கிற மாதிரியான பார்வை. ச்சே என்று தன்னை நொந்தாள்.

அவனுக்கு தன் மேல் இருந்த கொஞ்ச நஞ்ச மரியாதையும் போயிருக்கும் என்று எண்ணும்போது கண்களில் நீர் கசிந்தது ஏன்? எதற்கு என்று புரியாமல் சுண்டு விரலால், நீரை சுண்டிவிட்டவள், ''தேற்றிக் கொள் ஸ்வேத்தி தேற்றிக் கொள்'' என்று தனக்குள் கூறி தன்னைத்தானே சமாதானம் செய்து கொண்டாள்.

மனசு என்னவோ சுலபத்தில் சமாதானப்பட்டு விடவில்லை வேலையில் மூழ்கியவளுக்கு முழு மனதுடன் வேலையை கவனிக்க முடியவில்லை. பற்கள் பிரகாசிக்க சிரிப்பில் ஜொலித்த அவன் முகம் அடிக்கடி கண்முன் வந்து நர்த்தனம் ஆடியது.

தன் மீதே எரிச்சல் வந்தது ஸ்வேத்தாவிற்கு கோபத்தில் கையில் இருந்த பேனாவை தூக்கி எறிந்தாள்.

என்ன ஆச்சு எனக்கு? என்ன ஆச்சு எனக்கு? என்று திரும்பத் திரும்பக் கேட்டு பதில் கிடைக்காததால் சோர்ந்து போனாள்.

யார் இந்த ஜேசிக்கா என்று இப்பொழுது ஜேசிக்காவைப் பற்றிய ஆராய்ச்சியில் இறங்கினாள், ஸ்வேத்தா.

கொஞ்சிப் பேசி சிரிக்கும் அளவுக்கு நெருக்கமா? வீட்டிற்கு வேறு அழைத்தானே?

ஜேசிக்கா'வாம், ஜேசிக்கா. ஏன்? ஜேசிப்பழம்' என்று பெயரை வைத்துக் கொள்ள வேண்டியதுதானே, பெயரைப் பார் பெயரை என்று எண்ணியவள் அப்படியே ஆடிப்போனாள்.

என்ன ஆச்சு எனக்கு, முகம் கூட பார்த்தறியாத அந்தப் பெண்ணிடம் எனக்கு என்ன வெறுப்பு. இது எல்லாம் என்னுடைய இயல்பு இல்லையே என்று நினைத்தவளுக்கு, புதுசு புதுசாக அவளுள் நிகழும் குணாதிசயங்களையும், மாற்றங்களையும் உடனே புரிந்து கொள்ள இயலவில்லை.

அன்று வீட்டுக்கு போகும்போது தலை கனத்துப் போனது. வேண்டாத சிந்தனைகள் தன்னை நிறைய ஆக்ரமிக்கின்றன என்று உணர்ந்தாள்.

# 8

**வீ**ட்டில் அவளைப் பார்த்தவுடன் பயந்து விட்டார் காயத்ரி.

''என்னடா ராஜா ஒரு மாதிரி இருக்கே'' என்று பதறிப்போய் வீட்டுக்குள் நுழைந்த ஸ்வேத்தாவின் கழுத்தில் கைவைத்துப் பார்த்தார் காயத்ரி.

''உடம்பு'' கூட சுடவில்லையே. என்னடா ஆச்சு'' என்று கவலையுடன் வினவ.

''உச்... ஒன்றும்மில்லையம்மா'' என்று அம்மாவின் கையை விலக்கி, சோபாவில் 'தொப்' என்று அமர்ந்தாள்.

''இல்லை என்னவோ இருக்கு.. ஒருநாளும் நீ. இந்த மாதிரி இருந்ததில்லை. ஆபீஸிலே எதும் சண்டை கிண்டை போட்டியா?'' என்று சண்டை போடுகிற பெண் ஸ்வேத்தா இல்லை என்று தெரிந்தும் கேட்டார் காயத்ரி.

அம்மா பதில் சொல்கிற வரை விடமாட்டார் என்று புரிந்து ''லேசாக தலைவலி'' என்று முணுமுணுத்தாள். நிஜமாகவே அவளுக்கு தலைவலிக்க துவங்கியிருந்தது.

''இரு 'சுட சுட' காபி கொண்டு வரேன். உடனே வலி பறந்துவிடும்'' என்று கூறி சமையலறைக்கு பறந்தார், காயத்ரி.

''என்ன ஸ்வேத்தி திடீர்ன்னு தலைவலி? ஒருநாளும் தலைவலின்னு நீ சொல்லி நான் கேட்டதில்லை. முகம் கூட பார்க்க சரியா இல்லை டாக்டர்கிட்டே போகலாம்மா? எதுக்கும் 'செக்' பண்ணிடலாம்'' என்று நிஜமான கரிசனத்தோடு கேட்டாள் ஷைலஜா.

''டாக்டர் எல்லாம் வேண்டாம். ஆபீசில் நிறைய வேலை. ஃபிரி டைம்மே இல்லை. அதனால் லேசா வலிக்குது. கொஞ்சம் ஓய்வு எடுத்தா சரியாயிடும் அண்ணி'' என்று மெதுவாக முணுமுணுத்துவிட்டு தன்னுடைய அறைக்குள் சென்ற ஸ்வேத்தா.

அண்ணி தன்னை வித்தியாசமாக பார்ப்பதை அறிந்து கொள்ளவில்லை.

''ஸ்வேத்தாவிற்கு அடுத்து வந்து நாளெல்லாம் ஜேசிக்கா யாராக இருக்கும் என்ற சிந்தனையிலே கரைந்தது. அது தனக்கு தேவையற்ற வேலை என்று புரிந்ததும் அதிலேயே செலவிட்டாள்.

அன்று விடுமுறை நாள் என்பதால் ஸ்வேத்தா வீட்டில் ஒருவரும் அலுவலகம் செல்லவில்லை.

''இன்று இரவு, ஹோட்டலில் சாப்பிடலாமா? காயத்ரி, உனக்கு வசதி எப்படி? எல்லோரும் சேர்ந்து வெளியில் போய் ரொம்ப நாளாயிடுச்சு இல்லை. என்ன, போகலாமா?'' என்று முத்துசாமி அதிசயத்திலும் அதிசயமாக குடும்பத்தோடு வெளியில் செல்ல தயாராக இருக்க, காயத்ரியும் சந்தோஷத்தோடு தன்னுடைய சம்மதத்தை சொன்னார்.

''ஹைய் ஜாலி, எல்லோரும் சேர்ந்தா, எந்த ஹோட்டல்



கதை தொடர்ச்சி.. பக்கம் 58-ல்

போலாம்ண்ணா'' என்று வசந்தைக் கேட்ட ஸ்வேத்தா பதிலை எதிர்பாராமல் கண்மூடி யோசித்து பின் 'பார்க் ஷெரட்டன்' போகலாம் சரிதானேப்பா'' என்று உற்சாகமாக மொழிந்தாள்.

''எனக்கும் சம்மதம்'' என்று பெருவிரல்ல உயர்த்தி காட்டினார், முத்துசாமி ஸ்வேத்தாவிற்கு இணையாக.

ஏழு மணிக்கெல்லாம் வீட்டில் இருந்து கிளம்பி விட்டார்கள்.

ஸ்வேத்தா, வெள்ளை நிற சேலையில் சிவப்பு நூலால் பின்னல் வேலை செய்து அழகுபடுத்தப்பட்ட கிரேப் சேலையிலும், பொருத்தமான சிவப்பு நிற ரவிக்கை, சிவப்புநிற கழுத்தணி, காதணி என்று அழகு மயிலாக இருந்தாள்.

வழியில் 'ஷாப்பிங்' முடித்துவிட்டு, ஹோட்டலுக்கு, இரவு சாப்பாட்டிற்காக நுழைவதற்கு நேரம் சரியாக இருந்தது.

கும்மாளமாக, அரட்டையடித்து சாப்பிட்டுக் கொண்டிருந்த ஸ்வேத்தாவின் சந்தோஷம், ஹோட்டல் அறையில் நுழைந்த கிஷோரையும், கூட இருந்த வெளிநாட்டுக்காரியையும் பார்த்த கணத்தில் 'உஸ்' என்று சுத்தமாக வடிந்தது.

ரசித்து அருந்திய உணவு தொண்டை குழியில் இருந்து உள்ளே இறங்க மறுத்தது.

அதற்குள் முத்துசாமியும் கிஷோரைப் பார்த்துவிட்டார்.

''கிஷோர்'' என்று கையசைத்துக் கூப்பிட்டார்.

சட்டென்று திரும்பிப் பார்த்தான் கிஷோர். முத்துசாமியைப் பார்த்தவுடன், அங்கிருந்தபடி சிரித்து கையசைத்தவன் பிறகு நடந்து அவர்களருகே வந்து நின்றான். எல்லோருக்கும் பொதுவாக 'ஹலோ' சொன்னான்.

காயத்ரி அவனை கப்பென்று பிடித்துக் கொண்டார்.

''என்ன கிஷோர் வீட்டுக்கு வரமாட்டேன் என்கிறாய். அன்னைக்கு விருந்தாளிகளோடு விருந்தாளியா வந்து ஒரு இருபத்தைந்து நிமிஷம் கூட வீட்டிலே தங்கவில்லை. எனப்பா வந்தால் என்ன?'' என்று கேட்க.

''கட்டாயம் ஒருநாள் வரேன் ஆண்ட்டி'' என்று தலையை லேசாக சரித்து சொன்னான். விழிகள் வெறுமையான ஸ்வேத்தாவின் விழிகளை சந்தித்தன. ஒரு வினாடி நிலைத்து பின் சடாரென்று திரும்பின.

இவர்கள் பேசின வரையில் இன்முகத்துடன் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த 'அந்த' வெளிநாட்டுக்காரியை அறிமுகம் செய்து வைத்தான்.

''இவள் ஜேசிக்கா, என்னுடைய தோழி. இந்தியாவை சுற்றிப்பார்க்க அழைத்திருந்தேன்'' என்று இவன் சொல்ல, அந்த ஜேசிக்கா ஒவ்வொருவருக்கும் கைகொடுத்தாள்.

ஸ்வேத்தாவை அறிமுகப்படுத்துகையில் மட்டும் ஜேசிக்கா, அவளைப் பார்த்துவிட்டு, பின் நிமிர்ந்து கிஷோரைப் பார்த்து கண் சிமிட்டியதுப் போல இருந்தது ஸ்வேத்தாவிற்கு.

பிறகு அவர்கள் இருவரும் விடைப்பெற்று தங்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த மேஜைக்கு சென்றார்கள்.

47-ம் பக்க கதை தொடர்ச்சி..

ஜேசிக்கா உரிமையுடன் அவன் கையை பற்றி நடந்ததைப் பார்த்து ஸ்வேத்தா காரணமே புரியாமல் ஆத்திரப்பட்டாள்.

வெட்கம் கெட்ட பெண் நான்கு பேர் பார்வையில் ஆடவனின் கைபிடித்துக் கொண்டு செல்கிறாளே. இவளெல்லாம் ஒரு பெண்ணா? வேண்டும் என்றே, தேவையில்லாத தவறே இல்லாத ஒன்றைப் பற்றி ஆராய்ந்து, அந்த வெளிநாட்டுக்காரியைப் பற்றி தப்புதப்பாக நினைத்தாள்.

ஏன் வரவர ரொம்ப மோசமாகிறேன். நான் மோசமானவளா என்று அவளுக்கு சந்தேகம் தோன்ற ஆரம்பித்தது. கோண புத்தியுடனேயே இருப்பதாக, செயல்படுவதாக தோன்றியது ஸ்வேத்தாவிற்கு.

''அத்தே.. அத்தே'' என்று மணி அவளை உலுக்கும்போதுதான் அவள் தன்னிலை பெற்றாள்.

''என்ன...'' என்று தன்னை அடக்கியபடி கேட்டாள்.

''எனக்கு இரண்டு ஐஸ்கிரீம் வேணும் நீங்க சரின்னு சொன்னாதான் வாங்கித் தருவாங்க ப்ளீஸ் அத்தே. இரண்டு சரியா'' என்று ரகசியமாக அவளிடம் ஒதினான்.

அவனுக்கும் ம்ம்.. கொட்டினாள் ஸ்வேத்தா, என்றும் இல்லாத திருநாளாக இன்று போய் ஏன் ஹோட்டலுக்கு சாப்பிட வந்தோம் என்று நொந்தாள்.

அவனுக்கு வேறு ஹோட்டல் கிடைக்கவில்லையா. அந்த ஜேசிக்காவை அழைத்து வந்து அவள் முன்னே அலட்டணுமா? என்று இருந்தது.

''சிக்கன் வைக்கட்டுமா'' என்று அண்ணி கேட்கவும் இன்னும் தான் சாப்பிடாமல் உட்கார்ந்து இருப்பதை உணர்ந்து கடமைக்காக வாயில் திணிக்கத் தொடங்கினாள், ஸ்வேத்தா.

ஒரு பெண்ணை தொடாமல் நடக்கத் தெரியாதோ இவனுக்கு. புத்தியில்லாதவன்.

எவன் எக்கேடு கெட்டாலும் எனக்கென்ன வந்தது என்று ஒருபுறம் நினைத்தாலும், மறுபுறம் மீண்டும் மீண்டும் அவனைப் பற்றியே சிந்தித்தது அவளுடைய பேதை மனம்.

பிறகு வந்த நாட்கள் அமைதியாக கழிந்தன. ஜேசிக்கா வெறும் தோழியா? இல்லை வேறு எதுவுமா என்று சந்தேகம் அடிக்கடி துளைக்கத் துவங்கியது. என்னவாக இருந்தாலும் என்னை அது பாதிக்கப் போவதில்லை என்று மனப்பாடம் போல தனக்குள்ளே உறுப்போட்டுக் கொண்டே இருந்தாள்.

## 9

''**அ**ந்த பெண் வாழ்க்கையோடு விளையாடாதேடா'' புருவத்தை சுருக்கி வார்த்தையில் தீவிரத்துடன் சொன்னார் சிவராஜன்.



''என்னப்பா நீங்களும், புரிஞ்சுக்காமல், விவரம் இல்லாதவர் போல் பேசிகிட்டு''

''இல்லடா, ஏதோ கல்யாணம், ஒப்பந்தங்கறே என்னாலேயே ஜீரணிக்க முடியவில்லை. இங்க் வளர்ற பொண்ணுங்களால புரிஞ்சுக்க முடியாதுப்பா''

''இதெல்லாம் நத்திங் டாடி. அங்கே ரொம்ப சகஜம். நீங்க இவ்வளவு சீரிஸா நினைப்பீங்கன்னு தெரிஞ்சா சொல்லியிருக்கவே மாட்டேன்''

''உன்னோட வெளிநாட்டு மோகம், உன்னை இவ்வளவு தூரத்துக்கு மாத்தியிருக்கும்னு நான் நினைச்சே பார்க்கவில்லை'' அவர் குரலில் வருத்தம் இருந்தது.

''இத விடுங்கப்பா. நீங்க அவங்க வீட்டுல சீக்கிரம் போய் பேசுங்கள். இந்த முறை அமெரிக்கா போகும்போது அவளையும் சேர்த்துக் கூட்டிட்டு போயிடலாம்னு நினைக்கறேம்ப்பா''

''தாய் மண்ணுல பற்றுள்ள அந்த பெண் இதுக்கு சம்மதிக்கணுமே? அவகிட்டே வெளிநாட்டுக்கு போகணும்ங்கற எண்ணம் துளிகூட கிடையாது. இப்ப நீ வேற ஏதோ செய்தி சொல்ற, என்னால ஒன்றும் தீர்மானமாகச் சொல்ல முடியவில்லை''

''கல்யாணம் ஆனா எல்லாம் சரி ஆகிவிடும். நீங்க அதுக்கு ஏற்பாடு பண்ணுங்களேப்பா''

நினைத்ததையே சாதித்தவனுக்கு இது ஒரு பெரும் கஷ்டமாகவே படவில்லை.

''போன வருஷம் கூட நீ இவ்வளவு தீவிரமா இருந்த மாதிரியில்லையே. அப்ப நீ சென்னைக்கு 'குட் பை' சொல்லியாச்சா'' புலம்பல். குரலில் சிவராஜன்.

''எனக்கு இந்த ஊர் வேண்டாம்ப்பா'' உறுதியான குரலில் கிஷோர்.

''இதற்கெல்லாம் எத்தனை தூரம் அந்த பெண் சம்மதிப்பாள்னு எனக்கு புரியவில்லை,

அதற்குள் கீதா டிபன் தட்டுகளோடு வர, தன் மகன் தன்னிடம் சொன்ன செய்தியை அவளிடம் கலந்து கொள்ள மனமில்லாமல் வேறு விஷயத்தை ஆரம்பித்தார்.

அவரின் அத்தனை சொத்திற்கும் வாரிசானவன், தன் தொழிலை மேற்கொண்டு தொடர்ந்து, மேம்படுத்தி, வளருவான் என்று எண்ணிக் கொண்டிருந்தவர் திடீரென்று, வெளிநாட்டிற்கு அவன் வேலைக்கு போகப்போகிறேன் என்றபோதே சொல்ல முடியாத சங்கடம் ஏற்பட்டது. அங்கு சென்றதும், நன்கு பழகியதும், மீண்டும் சென்னைக்கு வருவதில் அவனுக்கு சுவாரசியம் குறைந்து போனது அவருக்கு நன்கு புரிந்துதான் இருந்தது.

ஆனால் அங்கு குடியுரிமை பெறும் அளவுக்கு உத்வேகமாக இருப்பான் என்று அவர் எண்ணிப்பார்க்கவில்லை.

ஒப்பந்தக் கல்யாணம்.

அமெரிக்காவில் பிறந்த ஒருத்தியை, அந்த நாட்டின் குடியுரிமைக்காக



வெறும் மணவேட்டில் பதிக்கப்பட்ட கல்யாணம். ஜேசிகா நல்ல தோழி என்கிறான்.

ஸ்வேத்தாவிடம் காதல் என்கிறான்.

குழம்பினார் அவர்.

அந்த ஒப்பந்த கல்யாணத்திற்கு விவாகரத்தையும் பெறுவதற்கு உரிய வேலைகளையும் ஏற்பாடு செய்துவிட்டு தான் மகன் அமெரிக்காவில் இருந்து திரும்பியிருக்கிறான் என்ற விஷயமும் அறிந்தார்.

## 10

**அ**ன்று பஸ் நிறுத்தத்தில் இறங்கி அலுவலகத்தை நோக்கி நடந்தவள் தன் பெயரைச் சொல்லி யாரோ கூப்பிடுவதை உணர்ந்து திரும்பினாள், ஸ்வேத்தா.

''ஹலோ ரஜு'' என்று தன்னுடன் வேலை பார்ப்பவளைப் பார்த்து சிநேகபாவமாக புன்னகைத்தாள்.

''என்னப்பா இப்பவெல்லாம் உன்னை பார்க்கவே முடியறதில்லை. அக்கௌண்ட்ஸ் பிரிவு பக்கமே வர்றதில்லை. அப்பறம் எப்படி இருக்கின்றாய்? நம்ம சின்ன பாஸ் சூப்பர்ஃப் இல்லை'' என்று கண்சிமிட்டி ரஜு பேசவும்.

இங்கேயும் அவன் பேச்சுதானா? என்று ஓய்ந்து போன ஸ்வேத்தா பேச்சை மாற்றும் முயற்சியாக, நீட்டிய அவளுடைய கையைப் பிடித்து ரேகை பார்த்தாள்.

''ரஜு நீ பல வெளிநாடுகளுக்கு பயணிப்பதற்கு நல்ல வாய்ப்புகள் இருக்கு, கட்டாயம் போவாய். உன்னோட ரேகை அப்படித்தான் சொல்லுகிறது'' என்றாள்.

''நிஜம்..மா'' என்று கண்கள் விரிய நம்பிக்கையற்று கேட்ட ரஜிக்கு நம்பிக்கையூட்டும் வகையில்,

''இங்கே பார், தோ இந்த பள்ளத்தில் இருந்து மேட்டுக்கு ஏறுகின்ற ரேகைப் பக்கத்தில் நட்சத்திர அமைப்பு இருக்கு. இது எல்லோருக்கும் அமைஞ்சிடறதில்லை. இது இருந்தால் வெளிநாட்டுப் பயணம் கைகூடும்'' என்று அடித்துப் பேசினாள், ஸ்வேத்தா.

''எனக்கு எப்பவுமே, வெளிநாடுகளை சுற்றிப்பார்க்கணும் என்று மோகம் உண்டு. தேங்க்ஸ் ஸ்வேத்தி. தேங்க்ஸ். எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா'' என்று குஷியாக பேசினாள் ரஜு. ஸ்வேத்தாவிடம் விடைபெற்று படியேறினாள்.

இவளுக்கு கைரேகை பார்க்க தெரியும் என்ற விஷயம் அலுவலகம் முழுவதும் 'காட்டு தீ' போல பரவியது.

அப்பப்பா, மனிதர்கள், இந்த ஜோசியத்திற்கு எப்படி



அடிமைகளாகிவிட்டார்கள்.

மதியானம் காண்டீனில் இருந்து சாப்பிட்டுவிட்டு தன்னுடைய அறைக்குள் நுழைந்தவுடன் கும்பலாக அவளுடன் பணிபுரியும் ஊழியர்கள் சிரித்தபடி வருவதைக் கண்டவுடன், இவளும் கண்களால் சிரித்தபடி என்ன விஷயம் என்று கேட்டாள்.

''என்ன ஸ்வேத்தா நீங்க, இவ்வளவு நாள் உங்களுக்கு கைரேகை பார்க்கத் தெரியும் என்கிற விஷயத்தை சொல்லவே இல்லை. எங்க கத்துகிட்டீங்க'' என்று கேட்ட ராதாகிருஷ்ணனை லலிதா அடக்கினாள்.

''என்ன சார் நீங்க? இந்த கேள்வி எல்லாம் அப்பறம் மெதுவா கேட்கலாம் ஸ்வேத்தா எனக்கு முதல்லே பார்த்து 'பலன்' சொல்லேன்'' என்று அவளிடம் உள்ளங்கையை விரித்துக் காட்டினாள்.

அதற்குள் ஸ்வேத்தா மேஜையின் மீது வசதியாக உட்கார்ந்து, கண்களில் குறும்பு கொப்பளிக்க, லலிதாவின் கையை தன்னுடைய கரங்களில் பிடித்து,

''ஒரு பூதக் கண்ணாடி இருந்தா வசதியா இருக்கும். ம் ம் ம். பரவாயில்லை. சமாளித்து கொள்கிறேன். யாரு நான் கைரேகை பார்ப்பேன் என்று சொன்னது ரஜியா. பயங்கரமான பெண்ணா இருப்பா போல. இன்னைக்கு காலையிலேதான் அவளுக்கு சும்மா விளையாட்டுக்கு ஏதோ சொன்னேன். அதுக்குள்ளே இந்த மூன்று மணி நேரத்துக்குள்ளே ஆபீஸ் முழுவதும் பரப்பியிருக்காள்னா அவள் பெருமைக்குரியவள்தான்'' என்று கிண்டலடித்தாள்.

''சீக்கிரம் பாரு ஸ்வேத்தா'' என்று பத்மினி குரல் கொடுத்தாள். ''அடுத்து எனக்கு பார்க்கணும்''

''அப்ப, பத்மினிக்கு அப்பறம் எனக்கு பார்க்கணும்'' என்று ராதாகிருஷ்ணன் குரல் கொடுத்தார்.

பிறகு, ராமன், ப்ரியா, ராவ், வெங்கட் என்று ஒருவருக்கொருவர், நான், நீ என்று சொல்லிக் கொண்டார்கள்.

ஒவ்வொருவருக்கும் நன்றாக ஊன்றிப் பார்த்து 'பலன்' சொன்னாள் ஸ்வேத்தா.

ராதாகிருஷ்ணனுக்கு ஜோசியப் பிரகாரம் இரண்டு பெண்டாட்டி என்று அவள் குறி சொல்ல, ஆளாளுக்கு அவனை தூண்டி துருவி ஆர்ப்பாட்டம் செய்து, அவனை உண்டு இல்லை என்றாக்கிவிட்டார்கள்.

''ம்ம். அடுத்து யாருக்கு பார்க்கணும் கை நீட்டுங்க'' என்று சொன்னபடி துப்பட்டாவை நீவி விட்டவள்.

பின் தன் முன்னால் நீண்டு இருந்த ஆண் கரத்தை ஏந்தி ஊன்றிப் பார்த்தாள்.

அறையிலிருந்து ஒவ்வொருவராக மெதுவாக நழுவி, வெளிச்செல்வதை அவள் உணரவேயில்லை.

அவள் ஏந்தியிருக்கும் கரத்தின் சொந்தக்காரன் தன்னை விழுங்கி விடுவதுப்போல் பார்ப்பதையும் அவள் அறியவில்லை.

கைரேகை பார்ப்பதில் ஒன்றிப்போயிருந்த ஸ்வேத்தா, ''வாவ்! பொய் சொல்லாமல் சொல்லுங்க, கட்டாயம் உங்களுக்கு ஒரு காதலி இருக்கணும்

சரியா'' என்று கேட்டுவிட்டு மீண்டும் ரேகையை அழுத்தி பார்த்தாள். பதில் வராததைக் கண்டு.

''என்ன ஒன்றும் சொல்.....'' என்றபடி நிமிர்ந்து பார்த்தவள் எதிரில் கிஷோர் நிற்பதைப் பார்த்தவுடன் மின்சாரம் தாக்கியதுப்போல வெலவெலத்துப் போனாள்.

இவன் எப்பொழுது வந்தான்? இவனுக்கா நான் கைரேகை பார்த்தேன் என்று நம்ப முடியாமல் பெரிய அழகிய கண்களை மேலும் விரித்தபடி மலங்க மலங்க விழித்தாள், ஸ்வேத்தா.

அவனோ மெதுவாக தன்னுடைய கையை விலக்கிக் கொண்டான். பின் இரு கைகளையும் பேண்ட் பாக்கெட்டுக்குள் விட்டவன் அவளை ஊன்றிப் பார்த்தான்.

''நீ சும்மா கைரேகை பார்க்க தெரியும் என்று கதை விடுகின்றாய் என்று நினைத்தேன்'' என்று சொல்லி நிறுத்திவிட்டு பிறகு,

''வாவ் ஒண்டர்ஃபுல்'' என்று ஆச்சர்யம் காட்டினான்.

ஒரு கையை பேண்ட் பாக்கெட்டில் இருந்து எடுத்து தன் நெஞ்சில் வைத்து,

''இதோ இங்கே ஒரு பெண் ரொம்ப வருஷமா இருக்கிறாள்'' என்று அவன் சொன்னபோது அவன் கண்களில் பிரகாசத்தை கண்டு மலைத்தாள் ஸ்வேத்தா.

கூடவே ஸ்வேத்தாவிற்கு பயங்கர எரிச்சலும் வந்தது. தன் அருகில் நின்றிருந்தவனை 'நச் நச்' என்று குத்த வேண்டும் போல வேகம் பிறந்தது. ஓ.. ஜேசிக்காவின் விஷயம் அப்படியா என்று பொறாமையில் நெஞ்சு வெடித்தது.

''காதலித்தவளை கை பிடிக்கும் நோக்கம் உண்டா அல்..லது சும்மா நேரப்போக்கிற்காகவா'' என்று வேண்டும் என்றே எரிச்சலில் கேட்டும் வைத்தாள்.

''சில்லி, கல்யாணம் என்று எனக்கு நடந்தால் அது அவளுடன்தான்'' என்று சொல்லி நிறுத்தி விட்டு பின்,

''நான் சொல்வது உனக்கு கிண்டலாகவா தெரியுது ஸ்வேத்தா, உனக்கு காதலின் தீவிரம் புரியாது'' என்றவன்

பேச்சை அத்துடன் நிறுத்தி அவளை பார்த்தான்.

அவன் விழியில் மினுக்கென்று தோன்றி மறைந்த ஒளியின் காரணம் புரியாமல் அவள் முழிக்க அவன் சடாரென்று வெளியேறினான்.

இவ்வளவு நாளும், இவ்வளவு நேரமும் தோன்றாத ஆவேசம் அப்போது அந்த நிமிடத்தில் தோன்றியது.

அழகாக வளர்த்து, பாதுகாத்து வைத்திருந்த நகங்களை ஏதோ ஒரு வேகத்தில் பிய்த்து பிய்த்து எறிந்தாள்.

வயிற்றை பிரட்டியது அவளுக்கு, தலை பாரமாக கனத்தது. மூச்சு விடவும் சிரமமாக இருந்தது. நகர்ந்து நாற்காலியில் உட்கார்ந்தவளுக்கு பிறகு தாளவில்லை. இத்தனை நாளும் தன்னிடத்திலேயே தனக்கு தெரியாமலேயே அவள் ஒளித்து வைத்திருந்த ரகசியம், எதிர்பாராத தருணத்தில் மலராமல்



உடைந்து சிதறியது அவளுக்கு மிகுந்த அதிர்ச்சியை தந்தது. உள்ளத்தில் இருந்து விம்மல் வெடித்தது.

எப்படி? எப்போதிலிருந்து அவனை நேசிக்கத் தொடங்கினேன் என்று கேள்விகள் பல அவளை துளைத்தது.

கிஷோர் கிஷோர் என்று அவளுடைய உடம்பிலிருந்து ஒவ்வொரு நரம்பும் துடித்தது. ஜேசிக்காவுடன் அவன் சென்றபோது பொறாமையால் மனசு குமைந்ததின் காரணம் நன்றாக இப்போது புரிந்து போனது.

மாலையில் அவள் வீட்டுக்கு சென்றபோது யாரும் அவளுடைய நிலையை கவனிக்கவில்லை. இரவில் படுக்கையில் படுத்தவளுக்கு அதுவரை அடக்கி வைத்திருந்த நீர் கண்களில் இருந்து 'தாரை தாரை'யாக வழிந்தது.

ஒருதலைக் காதலை மையமாக வைத்து வந்திருந்த ஒரு கதைப்புத்தகத்தை படித்துவிட்டு அவள் எப்படி கிண்டலடித்திருக்கிறாள் சுதாவிடம்.

என்ன ஒரு கிறுக்குத்தனம், ஒருதலைக்காதலாம். மண்ணாங்கட்டியாம். ச்சிய். அது எப்படி சாத்தியம். தான் காதலிப்பவன் வேறு ஒரு பெண்ணை காதலிப்பதை உணர்ந்து தன்னுடைய காதலை வெளிப்படுத்தாமல் அவனுடைய நினைவுகளிலேயே வாழ்ந்து முடிக்கின்றாளாம். எவ்வளவு முட்டாள்தனமான செய்கை என்று அவள்தான் அன்று எவ்வளவு பெரிய பிரசங்கம் அடித்தாள்.

இப்பொழுது நானும் அந்த சூழலில் சிக்கிவிட்டேனா என்று நம்ப முடியாமல் விம்மினாள்.

தான் ஒரு பாழும் நிலைக்கு தள்ளப்பட்டுவிட்டதாக எண்ணி நொந்தாள். எதனால் தனக்கு அவனிடம் ஈர்ப்பு ஏற்பட்டது என்று யோசித்து யோசித்துப் பார்த்தாள் புரியவில்லை.

ஆனால், ஓர் அலாதியான பிரியம் ஏற்பட்டு போனது என்பதை மறுக்க முடியவில்லை.

என் நினைவுகளில், எண்ணங்களில் நாயகனாக அவன் என்னில் நொடிப்பொழுதும் விலகாமல் இருக்கின்றானே, அவன் நினைவில் நான் இமை பொழுதாவது இருக்க மாட்டேனா என்று ஏங்கிப் போனாள், ஸ்வேத்தா.

தன்னைப்பற்றி கண்டுபிடித்த ரகசியத்தை யாரும் அறியாமல் ஒளித்து வைப்பதில் மிகவும் கவனமாக இருந்தாள், ஸ்வேத்தா. உள்ளுக்குள் அவள் இளக இளக வெளியில் இறுகி தெரிந்தாள்.

எங்கே வாய் சொல்லாத வார்த்தையை விழி ஜாடைக்காட்டி பேசிவிடுமோ என்ற பயத்தில் அவன் முகம் பார்ப்பதையே தவிர்த்தாள். அவளின் இந்த போக்கினால் அவன் முகம் இறுகுவதும், கலவரப்படுவதும் அவள் அறியவில்லை.

# 11

அன்று ஞாயிற்றுக்கிழமை ஸ்வேத்தா எப்பொழுதும்போல், காலையிலேயே தலைக்கு குளித்துவிட்டு கோவிலுக்கு சென்று அர்ச்சனையை முடித்துவிட்டு வீட்டிற்கு வந்தாள்.

அவளுக்காகவே காத்திருந்தாற்போல வீட்டில் உள்ள எல்லாரும் வரவேற்பறையில் அமர்ந்திருந்தார்கள், முதலில் பேசியது காயத்ரிதான்.

''ஸ்வேத்தா அப்பா உன்கிட்டே முக்கியமான விஷயமாக பேசணும் என்று உனக்காக காத்துக்கொண்டு இருக்காங்க'' என்றார்.

''என்கிட்டேயா? முக்கியமான விஷயமா?'' என்று ஆச்சர்யப்பட்டபடி தள்ளியிருந்த நாற்காலியை அப்பாவின் புறமாக நகட்டி அதில் அமர்ந்த ஸ்வேத்தா வசந்தை பார்த்து கண்ணாலேயே என்ன விஷயம் என்று வினவினாள்.

அவன் கண்களால் சிரிக்கவும், விஷயம் பயப்படும்படியானது இல்லை என்ற முடிவோடு,

''சீக்கிரம் சொல்லுங்களேன்ப்பா. ஒரே புதிரா இருக்கு'' என்று அவசரப்பட்டாள்.

அவளுடைய அவசரத்தைப் பார்த்த முத்துசாமி சிரித்துவிட்டார்.

''எல்லாம் உன்னுடைய கல்யாண விஷயம்தானம்மா. எங்களுக்கு எல்லாம் மாப்பிள்ளையை ரொம்பவும் பிடிச்சிட்டதும்மா. உன்னையும் ஒரு வார்த்தை கேட்டுடணும்னு வசந்த் உறுதியாக இருக்கின்றான். என்ன சொல்றே நீ'' என்று நேராக விஷயத்திற்கு வந்தார் அவர்.

கல்யாணம் என்ற உடனே உற்சாகமெல்லாம் 'புஸ்' என்று வடிந்துவிட்டது. அப்பாவை எதிர்த்து இதுவரை அவள் பேசியதே இல்லை. அப்பா எது சொன்னாலும் 'சரி' என்று சொல்லித்தான் பழக்கம். இப்போது எப்படி இந்த விஷயத்திற்கு மறுப்பு சொல்வது என்று தயக்கமாக இருந்தது.

திடீர் என்று இப்படி, இவ்வளவு சீக்கிரமாக கல்யாண பேச்சை எடுப்பார், என்று நினைத்தும் பார்க்காததால் எப்படி விளக்கிச் சொல்வது என்று கொஞ்சம் கூட தோன்றவில்லை.

மறுப்பு சொல்ல நாவெழவில்லை ஸ்வேத்தாவிற்கு. ஆனால் கட்டாயம் மறுப்பேன் என்று உள்ளே மனசு கிடந்து குதித்தது.

கிஷோர் ஏன் இப்படி செய்தீங்க? ஏன் என் மனசிலே நீங்கவே முடியாம நிறைஞ்சிருக்கீங்க. உங்களைத் தவிர என்னால் வேற யாரையுமே வாழ்க்கை துணையா கற்பனை செஞ்சிக்கூட பார்க்க முடியவில்லையே. உங்களின் அன்பு எனக்கு கிட்டவே செய்யாது என்று தெரிந்தும் நான் ஏன் இப்படி உங்களுக்காக உருகிப் போகிறேன் என்று அவள் தன்னுடைய போக்கில் மனதுள் புலம்பினாள்.

அவள் மௌனத்தை சம்மதம் என்றெடுத்துக்கொள்ள, முத்துசாமி

தொடர்ந்து புன்சிரிப்போடு பேசலானார். ''யாரு மாப்பிள்ளை என்று தெரிஞ்சுக்க வேண்டாமா'' என்று கேட்டு நிறுத்தி அவளின் குனிந்த முகத்தையே பார்த்தவர், பிறகு.

''நம்ம கிஷோர்தான்மா'' என்று முடித்தார்.

கிஷோர் என்று பெயர் கேட்டதும் 'சடக்' என்று தலை நிமிர்த்தாள் ஸ்வேத்தா. அவள் கண்களில் தேங்கியிருந்த நீரை கண்டவுடன் எல்லோரும் அதிர்ந்து போனார்கள்.

''இது யாருடைய ஏற்பாடப்பா'' என்று தொண்டை கரகரக்க கேட்டாள் ஸ்வேத்தா.

அவள் கேள்வி புரியாமல்,

''சிவராஜனுக்கும், ஆண்ட்டிக்கும் இதில் மிகவும் உடன்பாடுதான். நம்ம வீட்டிலும் உன் அம்மாவிற்கு கிஷோர் ரொம்ப பிடித்தம். உனக்கும் சரிதானே'' என்று வேகமாகவே கேட்டார், முத்துசாமி.

நல்ல சம்பந்தம் கைவிட்டு போய்விடக்கூடாதே என்ற கவலை அவருக்கு.

தனக்கு சம்மதம் இல்லை என்கிறார்போல ஸ்வேத்தாவினால் தலையை ஆட்ட மட்டுமே முடிந்தது. எங்கே பேசினால் வாய்விட்டு அழுதுவிடுவோமோ என்று பயமாக இருந்தது.

இது யாவும் பெரியவர்கள் எல்லோருமாக செய்த ஏற்பாடு. இன்னும் கிஷோர் விருப்பத்தை ஒருவரும் கேட்கவில்லை.

அவனுக்கு, ஓர் காதலியிருக்கும் விஷயமும், அவள் மேல் அவன் வைத்திருக்கும் பிரியமும் இவர்களுக்கு தெரிந்திருக்க நியாயம் இல்லை என்று அவள் மனசு கணக்கிட்டது.

அவனிடம், ஸ்வேத்தாவை மனம் புரிய விருப்பமா? என்று விருப்பத்தை கேட்டு அவன் இல்லை, முடியாது. எனக்கு அவளை பிடிக்கவில்லை என்று சொன்னால் தன்னால் அதை தாங்க முடியாது, நொறுங்கி போய்விடுவோம் என்று உணர்ந்து,

அவன் மறுக்க வாய்ப்பு தராமல் தானே மறுப்பது நலம் என்று எண்ணி, இதயம் வலிக்க, கண்களில் அருவி கொட்ட,

''எனக்கு கிஷோரை திருமணம் செய்து கொள்வதில் இஷ்டம் இல்லை'' என்று மூச்சிரைக்கச் சொல்லிவிட்டு, எழுந்து தன்னுடைய அறைக்குள் சென்றாள்.

அவள் மறுப்பாள் என்று ஒருவரும் நினைத்துக்கூட பார்க்காததால் சிலை போல் அமர்ந்திருந்தார்கள் குடும்பத்தினர்.

ஆனால் முதலில் சமாளித்துக் கொண்டது காயத்ரி.

''என்னங்க இது இவ்வளவு பெரிய குண்டா தூக்கி போட்டுட்டா இவ. கிஷோர் மருமகனா வரணும் அப்படியின்னு நான் வேண்டாத தெய்வம் இல்லை. சிவராஜன் வந்து கேட்டப்ப எப்படி சந்தோஷப்பட்டேன் தெரியுமா? இவளை விடப்போறதா இல்லை நான். மனசுல என்ன நினைச்சிகிட்டு இருக்கா? இவனைவிட பெரிய மன்மதன் கிடைச்சுடுவானா என்ன'' என்று பெரிசாக புலம்ப, முத்துசாமி அதட்டினார்.



''உச், சும்மாயிரு காயத்ரி, அவளுக்கு பிடிக்காத பட்சத்தில் வற்புறுத்தக்கூடாது. நமக்கிருப்பது ஒரே பெண். அவள் விருப்பத்திற்கு மாறாக ஒன்றும் செய்யமாட்டேன். இந்த பேச்சை இத்துடன் விடு. சும்மா ஸ்வேத்தாவை திட்டிகிட்டு இருக்காதே. சின்ன பொண்ணு அவ. சிவராஜன் கிட்டே நான் பேசிக்கறேன். என்ன புரிஞ்சுதா'' என்று முடித்தார்.

அவருக்கு தன் அன்பு மகள் கண்ணை கசக்கியவுடன் தாங்கவில்லை.

பொதுவாக அவர் ஸ்வேத்தா கண்கலங்கி பார்த்ததில்லை. சுலபத்தில் அவளுடைய உணர்ச்சிகளை வெளிகாட்டமாட்டாள். அவரை போலவே மன உறுதி உடையவள். அப்படிப்பட்டவள் கலங்கியவுடன், ஏதோ விஷயம் இருக்கிறது என்று புரிந்து, கொஞ்சம் அவள் வழியில் விட்டு பிடிக்கலாம் என்று முடிவெடுத்து யோசனை செய்தபடி அவரும் தன்னுடைய அறைக்குச் சென்றார்.

(ஜேசிகா, அமெரிக்கா என்று அவளுக்கு முற்றிலும் ஈடுபாடு இல்லாத விஷயுத்தில் கிஷோர் தீவிரமாக இருப்பதில் ஸ்வேத்தாவிற்கு நெஞ்சு கொள்ளாத வருத்தம். ஆனால் அதையும் மீறி அவளுள் முளைத்த காதலின் காரணத்தையும் அதன் முடிவையும் அவளால் கணிக்க முடியவில்லை).

## 12

**அ**திர்ந்து நின்றான் கிஷோர்.

வாழ்க்கையில் அதுநாள் வரை எதற்கும் கலங்காதவன் ஜேசிகா சொன்ன ஒரே வார்த்தையில் மிரண்டு போனான்.

ஸ்வேத்தா வீட்டில் இருந்து வந்த மறுப்பில் அவன் கலங்கியிருந்த சமயத்தில், ஜேசிகாவின் பேச்சு தலையை சுற்ற செய்தது.

''கம் அகெய்ன். திரும்பச் சொல்'' என்று கேட்டு பதட்டமானான்.

''நான் நீ வேறு திருமணம் செய்வதை அனுமதிக்கமாட்டேன்'' ஆங்கிலத்தில் அவளிடமிருந்து அழுத்தம் திருத்தமாக பதில் வந்தது.

''புரிந்துதான் பேசுகிறாயா?''

குரலில் கோபம் சுறுசுறுவென்று ஏறியது.

''உன்னையும், உன் நாட்டின் கலாச்சாரத்தையும், பண்பாட்டையும் நன்றாக புரிந்து, தெரிந்து, கொண்டவுடன், எனக்கு உங்களுள் ஒருத்தியாக வேண்டும் என்ற வேகம் கட்டுக்கடங்காமல் பொங்குகிறதே கிஷோர்.''

''உளறாதே ஜேசி. ஸ்வேத்தா பற்றி முழு விஷயமும் உன்னிடம் முன்பே சொல்லியிருந்த பிறகும், நீ இப்படி பேசுவது எனக்கு இரிடேட் ஆகிறது''

''அதற்குதான் அங்கிருந்து கிரீன் சிக்னல் கிடைக்கவில்லையே. பிறகு என்னுடன் குடும்பம் நடத்துவதில் உனக்கென்ன...''

கிஷோர் முறைத்த முறையில் ஜேசிகா பேச்சின் கோணத்தை மாற்றினாள்.



''உன் காதல் நிறைவேறாத பட்சத்தில் என்னுடன் இல்லறம் நடத்துவாய்தானே'' குரல் எதிர்பார்ப்போடு கேட்டாள் ஜேசிகா.

அவளுடைய கேள்வியில் கிஷோருக்கு அழுவதா? சிரிப்பதா? என்றே புரியவில்லை. இந்தியாவிற்கு வரும் வரை நல்ல தோழியாக நல்ல கம்பெனியனாக இருந்தவள், இங்கு வந்தவுடன், மாறியதைக் கண்டு சிறு அதிர்ச்சிதான்.

தன் மனநிலையை அவளுக்கு உணர்த்தும் வகையாக,

''ஒருத்தியை உளமார நேசித்துவிட்டால் இந்த உயிர் போகும் வரை நெஞ்சில் ஒருத்திக்கு மட்டும்தான் இடமுண்டு. ஜேசி எனக்கும் அப்படித்தான்''

கண்களில் தீவிரத்துடன் அவன் பேச,

''உன்னுடைய இந்த பேச்சுதான் என்னை அடித்து வசியம் செய்கிறது. எனக்கே எனக்கு மட்டுமாக ஒரு உயிர். என்னை தவிர வேறு ஒருத்தியையும் எண்ணிப் பார்க்காத நெஞ்சம், இந்த மாதிரி நான் அமெரிக்காவில் கண்டதில்லை, கேட்டதில்லை. மலருக்கு மலர் தாவும் வண்டுகள் தான் அங்கே புழக்கம். இங்கே உன் தேசத்தில் ஒருத்தனுக்கு ஒருத்தி என்று வாழுவது எனக்கு பொறாமையாக இருக்கிறது. எவ்வளவு விட்டுக் கொடுத்தல், எவ்வளவு அட்ஜெஸ்ட் மெண்ட், எவ்வளவு தியாகம். ரியலி ரொம்ப கிரேட்ப்பா நீங்க''

இந்திய கலாச்சாரத்தின் மேல் உள்ள மோகத்தில்தான் ஜேசிகா அவனிடம் நட்பானாள் என்பது அவனுக்கு தெரியும். அதுவும் தமிழ்நாட்டை சுற்றிப் பார்த்து ரசித்த பிறகு அவளுக்கு அந்த நாட்டை விட மனமில்லை.

கிஷோர் பதிலேதும் பேசாமல் தன்னையே வெறிப்பதை கண்டு தொடர்ந்து ''கிஷோர் நான் உன்னை விட்டுக் கொடுக்கப் போவதில்லை. நீ எனக்குத்தான். எனக்கே மட்டும்தான்'' குரல் உணர்ச்சி வேகத்தில் கிரீச்சிட்டது.

''குழந்தைதனமாக பேசாதே ஜேசி. நீ நினைப்பது நடக்காது. நடப்பதற்குரிய சாத்தியக்கூறுகள் மிக குறைவு''

''ஸ்வேத்தா உன்னை ஏற்றுக்கொள்ளாவிட்டால் உன் நிலை''

''அவளுக்கு என் மேல் ஈடுபாடு உண்டு. அவளுடைய சம்மதத்தை என்னால் பெற்றுவிட முடியும்''

''அப்படி முடியாவிட்டால், அவள் உன்னை ஏற்றுக்கொள்ளாத பட்சத்தில் உன் நிலை என்ன கிஷோர்?''

அந்த மாதிரி நிலைமையை அவன் இதுவரை யோசித்துப் பார்க்கவேயில்லை.

''என்னிடம் என்ன குறையிருக்கிறது மறுக்க. சகல தகுதியும் உடையவன் தானே''

''மணவேட்டில் திருமணத்தை பதித்த அனுபவத்தையும் சேர்த்து எல்லா தகுதியும் இருக்கிறது. அது தெரிந்தால் அவள் என்ன செய்வாள்?''

''அது தப்பு இல்லை ஜேசி. பிஸினஸ் ஒப்பந்தம் போல்தானே அதுவும். இதில் குறை சொல்ல ஒன்றும் இல்லை'' அவன் செய்த காரியத்தை



அசிங்கத்தை அவன் உணரவே இல்லை. ஜேசிகாவின் பிடிவாதத்தை எப்படி எதிர்நோக்குவது என்று உள்ளூர புரியாமல் திகைப்புதான் இருந்தது.

''ஸ்வேத்தா மறுத்துவிட்டால், என்னிடம் வந்து விடுவாயா? வந்துவிடுவாயா?'' என்று அவள் மாறி மாறி கேட்கையில், அவளின் மனசும் அதன் தீவிரமும் புரிந்து சங்கடமானது.

## 13

**அ**டுத்த நாள் வழக்கம் போல் அலுவலகம் சென்றாள் ஸ்வேத்தா. ஆனால் கிஷோர் அலுவலகத்திற்கு வரவில்லை. சிவராஜன் மட்டுமே வந்திருந்தார். அவனை பார்க்காத மனசை வருத்தப்படுத்தியது, ஒரே ஏமாற்றமாக இருந்தது.

''ஸ்வேத்தா, மெட்டீரியல் பிரிவில் இருக்கிற சாமுண்டீஸ்வரிக்கு கல்யாணம் முடிஞ்சிருச்சாம். பதிவுத் திருமணம். அம்மா, அப்பாவிற்கு தெரியாமல் எவ்வளவு தைரியம் பார்த்தியா? மாப்பிள்ளை யாருன்னு நினைக்கிறே, என்னோட எதிர் மேஜையில் உட்கார்ந்து வேலை பார்ப்பாரே நித்யா மூர்த்தி அவர்தான். எனக்கு ஒரே ஆச்சர்யம். அவங்க இரண்டு பேரும் ஆபீசில் பேசி நான் பார்த்ததே இல்லை. நீ பார்த்திருக்கிறாயா?'' என்று ரோஸலினா, மிகவும் சுவாரசியமாக, அன்றைய முக்கிய வம்பை பற்றி பேசிக் கொண்டிருந்தாள்.

''உச் இல்லை பார்த்ததில்லை'' என்று சுவாரசியமற்று பதில் வந்தது ஸ்வேத்தாவிடம் இருந்து.

அவளுடைய கவனம் எல்லாம் இங்கு இருந்தால்தானே. ஏன் கிஷோர் அலுவலகத்திற்கு வரவில்லை என்று யோசனையாக இருந்தது.

அலுவலகம் வந்ததும் அவனைப் பார்க்காதது மனசை என்னமோ செய்தது.

என்ன வேலையாக இருந்தாலும் மனசு முழு ஒத்துழைப்புத்தர மறுத்தது. அவன் எதற்கு அலுவலகத்திற்கு இன்று வரவில்லை என்று தெரியாத வரையில் நிம்மதி ஏற்பட போவதில்லை என்று இருந்தது ஸ்வேத்தாவிற்கு.

சிவராஜனிடம் கேட்கவும் தைரியம் வரவில்லை. அவர் அவளிடம் நன்றாக எப்பொழுதும் போல சிரித்துப் பழகினாலும், உள்ளூர கிஷோரை அவள் மணக்க மறுத்தது குறித்து வருந்துகின்றார் என்று புரிந்தது ஸ்வேத்தாவிற்கு.

''எனக்கு உங்க மகனை பார்த்த கணத்தில் இருந்து ரொம்ப பிடிச்சிருக்கு அங்கிள் ஆனால் உங்க மகனுக்கு அமெரிக்காவையும் ஜேசிக்காவையும்தான் பிடிச்சிருக்காம்'' என்று சொல்லத் தோன்றியது.

சொன்னால் தனக்குத்தான் அவமானம் என்று வாயை இறுக கட்டி வைத்தாள்.

''ஏய், என்னது இன்னும் ஒரு வாய்கூட சாப்பிடாமல், டிபன் பாக்ஸை பார்த்துட்டு இருக்கின்றாய். நான் சாப்பிட்டு முடிச்சாச்சு. இன்னைக்கு நீ நார்மலாவே இல்லை. என்ன விஷயம். எப்பவும் இப்படி இருக்க மாட்டியே என்கிட்டே சொல்லேன்'' என்று தோழியைப் பற்றிய கவலையுடன் பேசினாள், ரோஸலினா.

திடுக்கிட்டு கண்ணை உயர்த்திய ஸ்வேத்தா. ரோஸி தன்னையே கூர்ந்துபார்ப்பதை உணர்ந்து.

''சப்பாத்தி இன்னைக்கு நல்லாவே இல்லை. பார்த்தால் சாப்பிடணும்னு ஆசையே இல்லை'' என்று சொல்லி டப்பாவை மூடிவிட்டு எழுந்தாள் ஸ்வேத்தா.

''இவள் சரியில்லை'' என்று முணுமுணுத்தப்படி அவள் பின்னயே எழுந்து போனாள் ரோஸலினா.

அந்த வாரம் முழுவதும் அவன் அலுவலகத்திற்கு வரவில்லை. ஒருவேளை அவன் மீண்டும் அமெரிக்காவிற்கு சென்று விட்டானோ என்று சந்தேகம் வந்தது. கூடவே இருக்காது போனால் வீட்டில் வந்து அம்மா, அப்பாகிட்டே சொல்லிவிட்டுதான் போவான் என்று தன்னை சமாதானம் செய்து கொண்டாள்.

ஒருவேளை ஜேசிக்காவிற்கு ஊர் சுற்றிக்காட்ட கிளம்பியிருப்பானோ. அதனால் அலுவலக வேலை கூட கசந்து போயிற்றா அவனுக்கு என்று எண்ணினாள்.

அந்த ஜேசிக்காவிடம் அப்படி என்ன விசேஷம் இருக்கின்றது என்று அவளை பழித்தாள்.

ஜேசிக்காவையும், அவனையும் இணைத்து நினைக்கையில் வயிற்றை பிரட்டியது. அந்த நினைப்பு இணையற்ற சோகத்தை அவள் நெஞ்சில் உருவாக்கியது.

அவனை பார்க்காத அந்த ஒரு வார காலமும், ஒரு வருடம் போல இருந்தது ஸ்வேத்தாவிற்கு. அந்த ஒரு வாரத்திற்குப் பிறகு.

ஒரு சாய்ங்கால வேளையில் வீட்டின் முகப்பு மண்டபத்தில் ஸ்வேத்தா, மணியுடன் விளையாடிக் கொண்டிருந்தாள்.

வாசல் முன் கார் சப்தம் கேட்கவும் திரும்பிப் பார்த்தாள்.

சற்றும் எதிர்பார்க்காமல் கிஷோர் அதிலிருந்து இறங்குவதைப் பார்த்த கணத்தில் இருந்து மனசு மறுபடியும் சுருங்கி போயிற்று.

அவன் அவளை பார்க்கும் முன்பு அவசர அவசரமாக தடதடக்கும் நெஞ்சத்துடன் தன்னறைக்குள் ஓடி மறைந்தாள்.

அவன் சென்று விட்டான் என்று உறுதியாக தெரியும் வரை தன்னுடைய அறையிலேயே பழி கிடந்தாள்.

குழந்தை தனமான அவளின் கண்ணாம்மூச்சி விளையாட்டை எண்ணி அவளுக்கே தன்மீது எரிச்சல் ஏற்பட்டது.

ஆனால் அவனிடம் பேச எனக்கென்ன இருக்கிறது. அவன் சென்றதும் ஸ்வேத்தா அறையில் இருந்து வெளியே வந்தாள்.

முத்துசாமி கடிந்து கொண்டார்.



''வீட்டுக்கு வந்தவர்களை வாங்க என்று அழைக்கும் நாகரீகம் கூட உனக்கு கிடையாதா? இது என்ன புதுசா பழக்கம் அறைக்குள் போய் கதவை மூடிக் கொள்கின்றாய்,'' என்று அவளிடம் கோபப்பட்டார்.

தவறு தன் மீது இருக்கிறது என்று உணர்ந்து, ஸ்வேத்தா பதில் பேசாமல் உதட்டை கடித்துக் கொண்டு நின்றாள்.

அவளுக்கு, கிஷோர் என்ன காரியமாக வீட்டிற்கு வந்தான் என்று தெரிந்து கொள்ளவில்லை என்றால் தலை வெடித்துவிடும் போல் இருந்தது.

நேராக ஷைலஜாவின் முன் வந்து நின்றாள்.

''என்னவாம் அண்ணி அமெரிக்காவிற்கு திரும்பி போகின்றானாமா?'' என்று அசிரத்தையாக கேட்டாள்.

படுக்கை விரிப்பை சீர்படுத்திக் கொண்டிருந்த ஷைலஜா, லேசாக திரும்பி அவளின் முகம் பார்த்து,

''யாரைப் பற்றி கேட்கிறாய் ஸ்வேத்தி'' என்று கேட்டுவிட்டு, விட்ட வேலையை தொடர்ந்தாள்.

லேசாக சிவந்து, ''கிஷோர் என்ன விஷயமாக வந்தான்'' என்று நேரடியாக கேட்டாள்.

''ஞாயிற்றுக்கிழமை மதியம் அவர்கள் வீட்டில் விருந்துக்கு ஏற்பாடு பண்ணுகிறார்களாம். நம்மையெல்லாம் அழைத்துவிட்டு போக வந்தார். ரொம்ப நல்ல மாதிரியாக தெரிகிறார்'' என்று கிஷோரைப் பற்றி உயர்வாகச் சொன்னாள்.

ஸ்வேத்தா மேலே ஒன்றும் பேசாமல் அமைதியாக இருப்பதைப் பார்த்து, ''நீ ஒரு ஹலோ சொல்லியிருக்கலாம்'' என்று மெதுவாக அவள் முகம் பார்த்து சொல்லி நிறுத்தினாள் ஷைலஜா.

வீட்டில் உள்ளோர் யாவரும் அவளை விரோதியைப் போல் பார்ப்பதை உணர்ந்து சங்கடப்பட்டாள் ஸ்வேத்தா.

ஸ்வேத்தாவிற்கும், வீட்டிற்கு வந்த கிஷோரை வரவேற்க ஆசைதான். ஆனால் எங்கே, கிஷோரைப் பார்த்தவுடன் உடைந்து விடுவோமோ என்று அச்சமாக இருந்தது.

## 14

**அ**ன்று அலுவலகத்தில் இருந்து வீட்டுக்கு ஸ்வேத்தா கிளம்பிக் கொண்டிருக்கையில்,

''கிஷோரைப் பார்க்க வந்தேன்'' என்ற அறிவிப்போடு உள்ளே நுழைந்தாள் ஜேசிகா.

அந்த அழகான வெள்ளைக்காரியை பார்க்கையில் ஸ்வேத்தாவிற்கு பெண் பிறப்புரிமை பொறாமை எட்டிப் பார்த்தது.

''உங்க சென்னை ரொம்ப நல்லாயிருக்குப்பா. எனக்கு இங்கிருந்து



போகவே மனசில்லை'' -கண்ணோரம் சுருங்க கொஞ்சிப் பேசினாள் அவள்.

இப்படி பேசி பேசியே அவனை மயக்கியிருப்பாளோ? மனசு போகும் போக்கில் தன்னையே அதட்டி அவளை உட்கார பணித்துவிட்டு,

''ஒரு வாரமாகவே சிவராஜன் அங்கிள்தான் வருகிறார். அவர் பேக்டரி சைட்டுக்கு போகிறதாக அங்கிள் சொன்னார்.''

நாற்காலியில் வசதியாக அமர்ந்து, கால் மேல் கால் போட்டபடி, அணிந்திருந்த கறுப்பு நிற ஸ்கர்ட்டை இழுத்து விட்டுக் கொண்டு,

''ஸ்வேத்தா எனக்கு சுற்றி வளைத்து பேச வராது. நேரடியாக கேட்கிறேன். உன்னுடைய அபிப்பிராயத்தை சொல்வாயா''

என்ன என்பது போல் கண்களை ஸ்வேத்தா சுருக்க,

''எனக்கு இந்த ஊரின் உறவு வேண்டும் ஸ்வேத்தா. தான் அமெரிக்காவில் இருந்து கிளம்பும்போது இந்த மனநிலையில் இல்லை. ஆனால் இங்குள்ள குடும்பங்களையும், அதன் பாசப்பிணைப்பையும் பார்க்கையில், எனக்கும் உங்களுள் ஒருத்தியாகிவிடும் ஏக்கம் வந்து நெஞ்சை அடைக்கிறது. இந்த மண்ணில் பிறந்தவனை அடைய ஆவல் பிறக்கிறது. கிஷோர் புரிந்து கொள்ள மாட்டேன் என்கிறான். எனக்காக நீ அவனிடம் பேசுவாயா'' -சரளமாக ஆங்கிலத்தில் இயம்ப,

ஸ்வேத்தாவிற்கு தலையும் புரியவில்லை, காலும் புரியவில்லை. ஆனால் ஜேசிகா பேச, பேச, அதிலிருந்த நேர்மை அவளை பெரிதும் கவர்ந்தது. அவளுக்கு உதவ வேண்டும் என்ற ஆசையும் வந்தது. ஒருவேளை உன்னை காதலிக்க மட்டும் செய்வேன். திருமணம் புரிய சம்மதிக்கமாட்டேன் என்று மறுத்திருப்பானோ?

ஆனால் அவனுடைய ஜேசிகா சொல்லி கேட்காத கிஷோர், ஸ்வேத்தா சொல்லி கேட்கும் விஷயம் என்னவாயிருக்கும் என்ற எதிர்பார்ப்பு மனசுக்குள் கிளம்பியது. மனசிலிருந்தது வார்த்தை வடிவில் வெளியும் வந்துவிட்டது.

''நான் சொல்லி அவர் கேட்பாரா?'' என்று கேள்வி கேட்டாள்.

''உன் பேச்சிற்கு அவனிடம் நல்ல மதிப்பு உண்டு என்பது உனக்கு தெரியாவிட்டாலும், எனக்கு தெரியும்'' என்று அவள் சொல்லும்போதே கண்கள் பலவீனத்தில் மின்னின. அவளே தொடர்ந்து,

''கிஷோரின் வெளிநாட்டு மோகம் பற்றித் தெரியுமா?'' என்று கேள்வி கேட்டாள்.

அதை அறிந்தவள், அதனாலேயே அவன்மேல் ஒன்ற முடியாமல் தவித்தவள்தானே ஸ்வேத்தா. தெரியும் என்கிறார் போல அவள் தலையசைக்க ஜேசிக்கா தொடர்ந்தாள்.

''அந்த வெளிநாட்டு மோகத்தில் அந்த நாட்டு பிரஜையாகிவிட வேண்டும் என்ற காரணத்தினால் இருவரும் ஒப்பந்த கல்யாணம் செய்து கொண்டிருக்கிறோம். கல்யரணம் ரிஜிஸ்டர் ஆன கையோடு விவாகரத்திற்கும் ஏற்பாடு செய்துவிட்டான், அவன். அப்போது சம்மதித்த எனக்கு, இங்கு வந்து அவனுடைய நாடக கல்யாணம் நிலைக்க வேண்டும் என்று ஆசை வந்துவிட்டது. அது நியாயம் இல்லைதான். நியாய அநியாயம் பார்த்தா காதல் வருகிறது. எனக்காக அவனிடம் பேச முடியுமா? செய்வாயா?''



ஜேசிக்கா பேசியதைக் கேட்ட ஸ்வேத்தாவிற்கு மயக்கம் வராத குறைதான்.

அமெரிக்க பிரஜையாகிவிட வேண்டும் என்று அவன் செய்த காரியம் பெரும் அவமானத்தை தந்தது. இது நாட்டை கேவலப்படுத்துவதாக ஆகாதா? பிறந்து வளர்ந்த நாடு தெய்வத்திற்கு சமமானதல்லவா? இப்படி ஒதுக்கி தள்ளுவது சரியாகுமா? கிஷோர் மேல் வெறுப்பு பொங்கியது.

பெற்ற தாய் பிடிக்கவில்லை. நான் வேறு தாயிடம் போய் பிள்ளையாகிறேன் என்றால் அந்த அவமானம் தாய்க்கு தானே. தாய்மையை இழிமை படுத்தும் அவலத்தை தன்னுடைய நெஞ்சுகினிய கிஷோர் செய்தான் என்ற விஷயத்தை ஸ்வேத்தாவினால் ஜீரணிக்க முடியவில்லை.

## 15

**அ**ன்று சிவராஜன் வீட்டில் விருந்து என்று எல்லோரும் கிளம்பிக் கொண்டிருந்தார்கள்.

''ஷைலஜா, ஏன் ஸ்வேத்தி இன்னும் கிளம்பவில்லை. எல்லோரும் தயாராகிட்டு இருக்கோம். அவளை சீக்கிரம் புறப்படச் சொல்லு. அவள் டிரஸ் பண்ண ஆரம்பித்தால் ஒரு மணி நேரத்துக்கு மேல் ஆகும். இப்பவே ஆரம்பித்தால்தான் கிளம்பற நேரத்துக்கு சரியாயிருக்கும்''

''மணியை நான் கவனிச்சுக்கறேன். கொஞ்ச நாளா நான் பார்க்கிறேன். இந்த ஸ்வேத்தி சரியே, இல்லை என்ன ஆச்சோ அவளுக்கு நீ போய் கொஞ்சம் கவனி'' என்று மருமகளை பணித்துவிட்டு நகர்ந்தார் காயத்ரி.

ஷைலஜா ஸ்வேத்தாவின் அறையில் நுழையும்போது ஸ்வேத்தா படுக்கையில் கவிழ்ந்து படுத்திருந்தாள்.

''ஸ்வேத்தி, ஸ்வேத்திம்மா எழுந்திரு இன்னும் ரெடியாகலையா. இன்று சிவராஜன் அங்கிள் வீட்டில் விருந்து ஞாபகம் இருக்குல்ல, சீக்கிரம் போய் டிரஸ் மாத்து'' என்றாள்.

ஸ்வேத்தா எழுந்து உட்கார்ந்து உன்னிப்பாக நகம் கடிப்பதை பார்த்து ''என்னம்மா சும்மா உட்கார்ந்திருந்தா எப்படி, எழுந்திரு, எழுந்திரும்மா, என்ன ரொம்ப சோம்பேறியா ஆயிட்டே. எங்க ஸ்வேத்தி ரொம்ப சுறுசுறுப்பாச்சே'' என்று சின்னபிள்ளையிடம் பேசுவதைப்போல் பேசினாள், ஷைலஜா.

நகம் கடிப்பதை நிறுத்திய ஸ்வேத்தா, அண்ணியை நிமிர்ந்து பார்த்து,

''நான் வரவில்லை அண்ணி. வீட்டுலேயே இருக்கேன். நீங்க எல்லோரும் போய்விட்டு வாங்க'' என்று அமைதியாகச் சொன்னாள்.

லேசாக அதிர்ந்தாள் ஷைலஜா, ஆனாலும் காட்டிக் கொள்ளாமல், ''அது மரியாதையாகவா இருக்கும்? எதுக்கு வரமாட்டேங்கற. கொஞ்ச நாளா நீ சரியில்லை. என்னவோ மாதிரி இருக்க. சரி அது போகட்டும். இப்ப ஏன் வரமாட்டேங்கற அதைச் சொல்லு போதும்'' என்று கேள்வி கேட்டாள்.

''பிடிக்கவில்லை அண்ணி'' என்று ஒரே வார்த்தையில் பதில் வந்தது ஸ்வேத்தாவிடமிருந்து.

''என்ன பிடிவாதம் இது. அங்கிள், ஆண்ட்டி என்ன நினைப்பாங்க அவங்களை விடு, கிஷோர் வேறு வீடு வரை வந்து அழைத்துவிட்டுப் போனான். ஏற்கனவே அவனை பிடிக்கவில்லை என்று கல்யாணத்தை மறுத்திருக்கிறாய். இப்பொழுதும் அவர்களை தவிர்த்தாய் என்றால், இரு குடும்பங்களுக்கு இடையேயும் வீண் பிரச்சனைகள்தான் கிளம்பும் புரிந்துகொள் ஸ்வேத்தி. கிஷோரும்தான் என்ன நினைப்பார்?'' என்று அவள் முடிக்கவில்லை. அதற்குள் ஸ்வேத்தா சீறினாள்.

''யார் என்ன நினைச்சாலும் எனக்கென்ன வந்தது. கோபித்தால் கோபித்துக் கொள்ளட்டும். நான் வரவில்லையென்றால் கிஷோர் அப்படியே ஒடிஞ்சி போய் உட்கார்ந்துவிட மாட்டார். துரோகி, எட்டப்பன்'' என்று அவள் வேக வேகமாக முணுமுணுக்க,

சிலகாலமாகவே ஸ்வேத்தாவை உன்னிப்பாக கவனித்தவளுக்கு உள்ளுக்குள் ஒரு பெரும் சந்தேகம் எழுந்தது. மெல்ல ஸ்வேத்தாவின் முகத்தை நிமிர்த்தி அடக்க முடியாமல்,

''நீ கிஷோரைக் காதலிக்கின்றாயா'' என்று நிதானமாக கேட்டு பின் அவளை அழுத்தமாக கவனித்தாள்.

''நானா, காதலா? அதுவும் கிஷோரையா? என்று மறுத்துப் பேசினவளுக்கு அதற்கு மேல் தாங்காமல் கண்ணீர் திவலைகள் முத்து முத்தாக கன்னத்தில் இறங்கியது.

இரு கைகளாலும் முகத்தை மறைத்து அழுகையில் குலுங்கினாள்.

அவளை தன்னுடன் அணைத்தாள் ஷைலஜா.

''பைத்தியம் சும்மா இரு உஷ் அழக்கூடாது'' அவள் குலுங்குவதை உணர்ந்து,

''என்னம்மா... என்னம்மா...'' என்று ஸ்வேத்தாவின் தலையை பிரியத்தோடு கோதிவிட்டாள்.

''ஏன் அவனை திருமணம் செய்யமாட்டேன் என்று சொன்னாய்? இப்படி உள்ளுக்குள்ளேயே கரைந்து போவதற்காகவா? இப்படி பைத்தியமாக இருக்கின்றாய். பேசும்மா.: பேசு. நீ வாயை மூடிக் கொண்டிருந்தால் பாழாக போவது உன்னுடைய வாழ்க்கை. மனசை திறந்து சொல்லு, ஸ்வேத்தா'' என்று ஷைலஜா கேட்க,

ஒன்றும் பேசாமல் கல்லென இருந்த ஸ்வேத்தாவைக் கண்டு, அதைபற்றி மேலே பேசாமல்,

''நீ வரமாட்டேன் என்றால், அப்பாவிற்கு கோபம் வரும். விருந்துக்கு அழைத்தவர்களை அவமானப்படுத்துவதை அவர் விரும்பமாட்டார்.''

''தலை வலிக்குது'' என்று சாக்கு சொன்னவளின் முன் மாத்திரையையும், தண்ணீரையும் நீட்டினாள் ஷைலஜா. மாத்திரையை சாப்பிட வைத்து, அவள் ரெடியாகிறாளா? என்று கவனித்துவிட்டு வெளியே வந்த ஷைலஜாவிற்கு மைத்துனியை நினைத்தால் கவலையாயிருந்தது.

அழுத்தக் காரி. என்ன விசயம் என்று சொல்லமாட்டாள்.

சொன்னால்தானே உதவிக்கரம் நீட்ட முடியும்.

விருந்தும் பிரமாதமாக இருந்தது. கீதா ஸ்வேத்தாவை விழுந்து விழுந்து கவனிப்பதைக் கண்டு காயத்ரிக்கு ரொம்ப பெருமையாக இருந்தது. ஸ்வேத்தாவிடம் பேசும் விதத்தில் பேசி கிஷோருக்கு மணம் புரிந்து வைத்துவிட வேண்டும் என்று அந்த தாயுள்ளம் கணக்கிட்டது.

கிஷோர், தன் காதலை தனிமையில் அவளிடம் சொல்ல சமயத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தான். ஒரு கணமும் அவளிடம் இருந்து பார்வையை அகற்றவில்லை.

''டேய் என்னடா?'' -தகப்பனார் மகனின் பார்வையை கவனித்து சீண்ட,

''சும்மா இருங்கப்பா'' என்று சொன்ன கிஷோருக்கு முகம் சிவந்தது.

மகனின் ஏக்கம் புரிய சிவராஜன் அவனுக்கு உதவும் விதத்தில்,

''கிஷோர், ஸ்வேத்தா, உன்னோட கம்ப்யூட்டர் சீடி கனெக்‌ஷனைப் பார்க்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருப்பாள். கம்ப்யூட்டர் ரூமிற்கு கூட்டிக் கொண்டு போய் காட்டேன்'' -வெகு சாதாரணமாய் அவர் பேச,

கிஷோர் கண்களாலேயே அப்பாவிற்கு நன்றி தெரிவித்தபடி, ஸ்வேத்தாவை பார்த்தான்.

எந்தவித பிகுவும் இல்லாமல், உடனே அவனுடன் சென்றாள் அவள். அவனிடம் ஒன்று கேட்டே ஆகவேண்டும்.

கம்ப்யூட்டர் ரூமிற்குள் வந்ததும் இருவருக்கும் சீடி பார்க்க வேண்டும் என்ற ஒரு எண்ணத்தையும் காணும்.

கிஷோர், ஸ்வேத்தாவிடம் எப்படி தன் காதலை சொல்வது என்று வாழ்க்கையிலேயே முதன் முறையாக புரியாமல் தவிக்க,

ஸ்வேத்தாவிற்கு அவன் மௌனம் எரிச்சலை கிளப்பியது, அதே வேகத்தில்,

''இவ்வளவு ஈனத்தனமான காரியத்தை செய்துவிட்டு எப்படி 'கூல்' ஆக இருக்கிறீர்க்ள். எப்படி இப்படி ஒரு கேவலமான காரியத்தை செய்ய துணிந்தீர்கள்? தப்பில்லையா?''

அவன் ஒன்றும் புரியாமல் புருவத்தை உயர்த்த

''ஜேசிகாவை நீங்கள் அமெரிக்க குடியுரிமை பெறுவதற்காக மணம் புரிந்தது உண்மைதானே?''

ஸ்வேத்தாவின் வரவால் மலர்ந்து கிடந்த அவன் முகம் அவளுடைய பேச்சில் கருத்து சுருங்கியது. என்ன சொன்னாலும் இங்குள்ளவர்களுக்கு புரியப்போவதில்லை என்ற எண்ணம் ஏற்பட்டது.

''அதற்கு என்ன செய்ய வேண்டும் என்கிறாய்?'' குரல் நிதானத்தை இழந்திருந்தது.

''இப்படி எல்லாம் குறுக்கு வழி கண்டுபிடித்து அமெரிக்க பிரஜையாகி நீங்கள் சாதிக்கப்போவது என்ன? என்று தெரிஞ்சுக்கலாமா? இவ்வளவு கேவலமான நீங்கள், பிரயாச்சித்தமாக, அந்த நாடக திருமணத்தை நிஜமாக்கி, அந்த அமெரிக்காவில்....'' அவளை மேலே பேச விடாமல் அவன் குரல்



தடுத்தது.

இதை சொல்வதற்கு நீ யார் என்று அவன் கேட்பான் என்று அவள் எதிர்பார்த்தாள். ஆனால் அவனோ அவளை கதிகலங்கச் செய்யும் செய்தி ஒன்றை சொன்னான்.

''என் மனதில் நீ இருக்கும்போது வேறு எவளையும் என் மனைவியாக பார்க்க முடியாது ஸ்வேத்தா'' என்று ஒரு பெரிய குண்டை தூக்கி போட்டான்.

குபுக் என்று முகம் சூடானது. இதயம் ஒருமுறை நின்று பின் இரண்டு மடங்கு வேகமாக இயங்கத் தொடங்கியது.

ஸ்வேத்தா விக்கித்து நிற்பதைக் கண்டு மெல்ல அவன் அவளருகே வந்து, தோள்பட்டையில் கைவைத்து அவன் புறமாக திருப்ப சட்டென்று விலகினாள்.

''டோண்ட் டச் மீ. நீங்கள் துரோகி. உங்களிடம் பேசுவதைக்கூட பாவகாரியமாக நினைக்கிறேன். என் தாயை கேவலப்படுத்தியவனை நேசிக்க என்னால் முடியுமா? அது போலத்தான் இதுவும். கொலைகாரன், கொள்ளைக்காரனுக்கு கூட மனைவி ஆவேனே தவிர உங்களைப் போல பச்சை துரோகியின் கால்டியில் மாலையாக விழுந்து கிடக்கமாட்டேன்'' என்று மூச்சிரைக்க கோபமாக கத்திய ஸ்வேத்தா, அதே வேகத்தில் அங்கிருந்து நகர்ந்து வெளியறைக்கு வந்துவிட்டாள்.

கிஷோர் ஆடாமல் அசையாமல் நின்று கொண்டிருப்பது கண்ணில் பட்டது.

## 16

**நா**ட்கள் மெல்ல நகர்ந்தது.

ஸ்வேத்தா வழக்கம்போல அலுவலகம் சென்று கொண்டிருந்தாள். கிஷோரின் நிழல் கூட அவள் இருக்கும் திசைக்கு வரவில்லை.

இடையில் வசந்த் கிஷோரை அமெரிக்க எம்பஸியில் அவனை பார்த்ததாக செய்தி சொன்னான்.

அனேகமாக இந்த வாரம் அமெரிக்கா கிளம்பி விடுவான் போலதான் இருக்கிறது என்று அவளுக்கு கேட்கும்படியாக முணுமுணுத்தான்.

அவள் விஷயம் அங்கு எல்லோருக்கும் தெரிந்த மாதிரிதான் பட்டது ஸ்வேத்தாவிற்கு.

அன்று அலுவலகம் வந்தவுடன், சிவராஜன் அழைக்க ஸ்வேத்தா அவர் முன் போய் நின்றாள்.

''கிஷோர் நாளைக்கு காலை ஃப்ளைட்டில் அமெரிக்கா போகிறானாம். உன்னிடம் சொல்லச் சொன்னான்.''

''ம்ம்ம்ம்'' -என்றதுக்குமேல் குரலே வரவில்லை ஸ்வேத்தாவிற்கு.

மனசு பலவிதங்களில் குழம்பியது. நெஞ்சு முட்டிக்கொண்டு



அழுகையும் வந்தது. சட்டென்று அங்கிருந்து தன்னுடைய அறைக்குள் வந்துவிட்டாள்.

அன்று முழுவதும் ஸ்வேத்தாவிற்கு தன் எண்ணம் போகும் போக்கை புரிந்து கொள்ளவே முடியவில்லை. படுத்தால் தூக்கம் வர மறுத்தது. கண்களில் கண்ணீர் வரவில்லை. ஆனால் நெஞ்சம் அழுது வடிந்தது. எப்படியோ அன்றைய இரவை கடந்தவள், மறுநாள் விழிக்கையிலேயே தன்னுடைய கிஷோர் அந்த மண்ணில் இருந்து பறந்துவிட்டான் என்ற எண்ணம்தான் முதலில் வந்தது. வீட்டில் இருந்து இல்லாததையும், பொல்லாததையும் எண்ணி கலங்காமல், எப்பொழுதும் போல் அலுவலகத்திற்கு கிளம்பினாள் ஸ்வேத்தா. அவள் அறைக்குள் வந்தவுடன், ப்யூன் வந்து பாஸ் அழைப்பதாக சொல்ல,

ஸ்வேத்தா கிளம்பி சிவராஜனின் அறைக்குள் செல்ல, சுழல் நாற்காலியில் புன்னகையுடன் அமர்ந்திருந்த கிஷோரைக் கண்டதும் சகலத்தையும் மறந்து போனாள்.

''கிஷோர்... நீங்க...'' என்று திணறலாய் பேச்சு வந்தது அவளிடமிருந்து.

''எந்த மண் எனக்கு சொந்தமோ அந்த மண்ணில் இருந்து கொண்டு என்னவளின் பதிலுக்காக காத்திருக்கிறேன். என்னை ஏற்றுக் கொள்வாயா ஸ்வேத்தா'' எல்லையற்ற ஆனந்தத்தில் அவன் கண்கள் குளமாகின.

''இன்று ஃப்ளைட்டில் அமெரிக்கா சென்றது ஜேசிகா மட்டும்தான். உனக்கு தன் வாழ்த்தை சொல்லச் சொன்னாள். வாழ்த்தை ஏற்றுக் கொள்வாயா?''

கண்ணிமைத்து விழித்தாள் ஸ்வேத்தா. அவன் பேசியதின் முழு அர்த்தமும் பொட்டில் அறைந்தது போல் புரிந்தது.

அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள். அவளால் நம்பவே முடியவில்லை. அவன் கண்களில் தெரிந்த அப்பட்டமான காதல் அவளை போதைக் கொள்ள வைத்தது. இருவரின் கண்களும் ஓராயிரம் வார்த்தைகளை பேசியது.

ஸ்வேத்தாவின் சம்மதம் அவளின் பார்வையில் கிஷோருக்கு புரிந்து போய் அதற்கு மேல் தாங்காமல் ஒரே எட்டில் அவள் அருகில் வந்து தன்னுடன் இறுக அணைத்துக் கொண்டான்.

''ஸ்வேத்தா இது ஒன்றும் கனவில்லையே'' அவன் குரல் கரகரத்திருந்தது.

''இதற்காகத்தான் ஐந்து வருடம் தவம் இருந்தேன் ஸ்வேத்தா. ஐந்து வருடம்'' என்று மீண்டும் சொன்னவன் ஒரு நெடிய பெருமூச்சை விட்டான்.

அவன் சொன்னதைக் கேட்ட ஸ்வேத்தா அதிர்ந்து சிலையென்று நின்றாள்.

அவன் பேச்சு புரியவில்லை என்பதை உணர்த்தி ஆச்சர்யமாக அவன் முகம் நோக்கினாள்.

அவள் விழிகளை முத்தமிட்டவன் ''வா உனக்கு நிறைய சொல்கிறேன்'' என்றபடி அவளை தோள் வளைவில் நடத்திச் சென்று சோபாவில் உட்கார வைத்தான்.



''ஸ்கூல் படிப்பை முடித்துவிட்டு, அந்த விடுமுறையில் பாளையங்கோட்டையில்தானே, இருந்தாய்?'' என்று அவன் கேட்க,

''ஆமாம் பாட்டியை பார்க்க. உங்களுக்கு எப்படி தெரியும்'' என்று ஆச்சர்யப்பட்டாள்.

''என்னுடைய ஃப்ரண்ட் கல்யாணத்திற்கு நான் பாளையங்கோட்டை வந்தேன். கல்யாணத்திற்கு நீயும் வந்திருந்தாய் ஞாபகமிருக்கா? செந்தில்-ராஷ்மி கல்யாணம்.''

''ஓ... ராஷ்மிக்கா பாட்டி வீட்டுக்கு பக்கத்து வீடு. அதனாலே பழக்கம்'' என்று இடையில் புகுந்து பதிலளித்தாள்.

''அன்றுதான் உன்னைப் பார்த்தேன். அன்றே என் நெஞ்சில் கனமாக விழுந்து விட்டாய். ஆனால் அப்பொழுது நீ ரொம்ப சின்னப் பெண். உன்னிடம் எப்படி பேசுவது என்று புரியாமல் குழம்பி நின்றேன்.''

கேட்க கேட்க இனிமையாக இருந்தது ஸ்வேத்தாவிற்கு இவனுக்கு கூட குழப்பம் வருமா? என்று பிரம்மிப்பாக இருந்தது.

''அப்படி இப்படி என்று செய்தி சேகரித்ததில் நீ அப்பாவுடைய நெருங்கிய சிநேகிதரின் மகள் என்று தெரிந்தது. அன்று என் நெஞ்சில் படர்ந்த நிம்மதியை வார்த்தைகளால் வடிக்க முடியாது.

நான் அமெரிக்காவில் இருந்து வரும்போதெல்லாம் உன்னை பற்றி தோண்டி துருவி கேள்வி கேட்பதை பார்த்து அப்பா புரிந்து கொண்டார்.

நீ பக்குவப்படும் வரை பொறுத்திருக்க வேண்டும் என்று 5 வருடம் முழுசாக 5 வருடம் பொறுத்துக் கொண்டேன். அப்பாவை இதில் மூக்கை நுழைக்கக்கூடாது என்று கண்டிப்பாக சொன்னேன். அவரும் புரிந்து கொண்டார்.

ஆனால் நீ சமீப காலமாக என் முகம் பார்த்துக்கூட பேசாமல் இருந்ததைப் பார்த்து எவ்வளவு தூரம் பயந்திருப்பேன் தெரியுமா? என் மீது அவ்வளவு வெறுப்பா என்று, கலங்கிப் போனேன். அதைக்கூட என்னால் மாற்றிவிட முடியும் என்ற நம்பிக்கையில் இருந்தேன்.

ஆனால் கல்யாணப் பேச்சை மறுத்தாய் பார் அன்றுதான் என் கண்மூடி வேதனையை அடக்கினேன்.'' பிறகு தொடர்ந்து.

''என் வாழ்க்கையே அஸ்தமித்துவிட்டதைப் போல் உணர்ந்தேன். இந்த ஒருவாரமும் அம்மம்மா'' என்றவனின் குரல் கரகரத்தது. அணைப்பு இறுகி கொண்டே வந்தது.

''அன்று கூட விருந்து ஏற்பாடு செய்தது உனக்காகத்தான், உன்னிடம் மனம் விட்டு இந்த அளவிற்கு இல்லை என்றாலும், என் மனசை உனக்கு தெரியப்படுத்த வேண்டும் என்று எண்ணியிருந்தேன். ஆனால் என்னை மிகவும் வெறுத்து, தேசத்துரோகி என்றாய் பார்.... அப்பொழுதே எனக்கு வாழ்க்கை வெறுத்துவிட்டது. உலகத்தில் எந்த பிடிப்பும் அற்று விட்டது போல் இருந்தது. நீ இல்லாமல் அமெரிக்கா என்ன அமெரிக்கா. நிலவுக்கு கூப்பிட்டாலும் போகமாட்டேன்''

தனக்காக அவன் தன்னையே மாற்றிக் கொண்டது புரிய ஸ்வேத்தாவிற்குள் கட்டுங்கடங்காமல் மகிழ்ச்சி வெள்ளம் பெருகியது.

லேசாக எக்கி, அவன் கன்னத்தில் தன்னுடைய செவ்விதழ்களை பதித்தாள்.

அந்த வினாடியில் கிஷோர் விறைத்தான். அவனின் விழிகள் அவள் மேல் ஆவலாக படறவும், வெட்கத்தில் விரிந்த முகத்தை அவன் மார்பில் சாய்ந்து மறைந்தாள் ஸ்வேத்தா.

''நான் நினைத்தேன் நீங்கள் ஜேசிகாவைத்தான் கல்யாணம் செய்து கொள்ள போகிறீர்கள் என்று. அன்று உங்களுக்கு ரேகை பார்த்தபோது உங்களுக்கு காதலி இருப்பதாக சொன்னீர்களே. நான்தான் அது என்று ஏன் சொல்லவில்லை.''

''நீ வேறு மாதிரியாக நினைத்துக் கொண்டு கஷ்டப்பட்டாயா? உனக்கும் என்மேல் அன்பு வரவேண்டும் பிறகுதான் கல்யாணம் என்று இருந்தேன். என்மேல் அவ்வளவு நம்பிக்கை ஒன்றும் நடக்காமல் எல்லாம் எதிர்புறமாக செயலாகவும், முதலுக்கே மோசமா? என்ற நினைப்பில் உன் அன்பை கல்யாணத்திற்கு பிறகு சம்பாதித்துக் கொள்ளலாம் என்று நேரடியாக கல்யாண பேச்சில் இறங்கினேன்''

''அன்று லைப்ரரியில் தற்செயலாக உன்னைப் பார்த்தேன். புத்தகத்தை ஒரு கையில் வைத்துக் கொண்டு சண்டைப்போட தயாராக திரும்பினாய் பார், அங்கேயே உன்னை இழுத்து முத்தமிட வேண்டும் போல் இருந்தது எப்படி அடக்கிக் கொண்டேன் என்றே எனக்கு தெரியவில்லை'' என்றவன் மெல்ல அவள் இதழ் நோக்கி குனிந்தான்.

நாணத்தில் சிவந்தபடி அவன் நெஞ்சில் தலைசாய்த்து தன்னை மறைத்துக் கொண்டாள் ஸ்வேத்தா.

(முற்றும்)